கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௪௯.] நந்தன-௵ தை—மாசி-௴ [பகுதி, ௩-௪.

Vol. 49. January—March 1953 No. 3-4.

சிலப்பதிகாரம்: உரைபெறுகட்டுரை

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

உரைபெறு கட்டுரை என்பது உரைநடை பெற்று இயலும் கட்டுரை என விரியும். மேலைப்பதிகம் செய்யுள்; இஃது உரைநடை என்னும் வேறுபாடு விளங்க உரைபெறு கட்டுரை என்றார். இந்நூலுள் மேலும் உரை விரவு மிடத்து இன்னோரன்ன தலைப்புடன் இவ்வாசிரியர் விதந்து ஓதுப.

இனி, கட்டுரை என்பது புனைந்துரை என்பதோடு ஒரு பொருட் கிளவி. ஆகலின் அஃது ஈண்டுப் பாயிரம் என்னும் பொருட்டு. 'முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம், புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்' என்பது நன்னூல். இந்நூலின் காண்டந்தோறும் இறுதிக்கட் பயிலும் கட்டுரைகளும் இப்பொருளே குறித்து வருவன.

என்னை? கட்டுரையும் பாயிரமே எனின், மேலைப்பதிகத்தின் வேறாய் இங்கு இரண்டாவது கட்டுரை வேண்டற்பாற்றன்று என்பார்க்கு; மேலைப்பதிகமும் இக்கட்டுரையும் வேறுவேறுவன அல்ல; இரண்டும் ஒன்றாய் இயைந்த பொருளனவே என்பது.

காண்டந்தோறும் இறுதிக் கட்டுரைகளும் பாயிரம் என்றமையால், அவை ஒருநூலுக்கே பலபாயிரங்கள், மிகைபடக் கூறலாய் வழுவாதோ எனின்; வழுவாது. அவை, இன்றியமையாத சிறப்புடன் அவ்வக் காண்டப் புறவுரையாகி, பலபகுதிப்பட்ட சிற்றுறுப்புக்களாய் அடங்கும். ஆகலின், நூன்முழுதும்சேரப் பொதுமையின் ஒன்றாய் நடக்கும் பேருறுப்பியாகிய பாயிரத்துள் அவை

வேறுவேறுகாமே ஒன்றுபடுதலுடைய் என்பது. இங்ஙனம் ஒரு நூலின் முதல் இடை கடை என்ற பலவகை இடந்தொறும் பரந்து நிற்றலானன்றே பாயிரம் எனக் காரணக்குறி போந்தது என்க.

என்னை? ஒருநூலின் முதற்கண்ணன்றி, நடுவிலும் முடிவிலும் கூடப் பாயிரம்கூறல் உண்டோஎனின்; உண்டு. பால் இயல் அதிகாரங்களாகப் பரந்துபட்ட நூலின் பால்முகத்தும், இயல்முகத்தும், அதிகாரமுகத்தும் பாயிரக்கூறுகத் தந்துரைக்கும் பொருள்கள் பலவுள. அவை யெல்லாம் இடையிற் பாயிரம் பயிலற்கு எடுத்துக்காட்டாம் என்பது.

இவ்வாறே, ஆசிரியர் பவணந்தியார் நன்னூலகத்து அதிகாரந்தோறும் சிறப்புப்பாயிரம் அமையக் கூறினர். அதனைச் சிறிது விரித்துரைத்தல் மிகையாகாது.

'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த வுரைப்பதும் சிறப்பென் ருகும்'

எனவும், 'வணக்க மதிகாரம் என்றிரண்டும் சொல்லச், சிறப்பென்னும் பாயிர மாம்' எனவும் விகற்பவகையான சிறப்புப் பாயிரம் விதிக்கப்படுவதுண்டு. அவை தற்சிறப்புப் பாயிரம் என வழங்கும். அவ்வகைப் பாயிரம்,

'பூமலி அசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே'

என எழுத்ததிகாரத் தொடக்கத்திலும்,

'முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே'

எனச் சொல்லதிகாரத் தொடக்கத்திலும் அமைந்து விளங்குவன.

என்னை? அவை ஆண்டு 'நுதலிப்புகுதல்' என்னும் உத்திவகையாக உரைக்கப் பெற்றனவால் எனின்; ஒக்கும். அவ் வுத்தியாற் கருதிய பொருளும் இத் தற்சிறப்புப்பாயிரப் பொருளும், இரண்டும் வேறுவேறுகாமல் ஒன்றேயா மென்பது.

இனி, கம்பர் வில்லிபுத்தூரர் முதலான காப்பியப் புலவரும், தத்தம் நூலிடைப் பலவிடத்து வழிபடு கடவுளை வணங்கிச் சென்றனர். அவ் வணக்கங்களும் நூலின் நடுவிற் பயின்ற பாயிரப் பகுதியவே ஆகும். வடநூலாரும் ஆதி மத்திய அந்தங்களில் இங்ஙனமாய மங்கலங் கூறுதல் மரபென்ப.

இனி, நூலின் இறுதியிற் பாயிரம் வழங்குதல் யாங்குப்பெறலா மெனிற் கூறுவேன். பதிற்றுப்பத்திலுள் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு பதிகங்கொண்டு முடியும். அவையெல்லாம் பாயிரப் பொருள் தழுவி நடப்பனவாகலின், இதற்குச் சான்றுதல் வெளிப்படை. அன்றியும் பிரயோகவிவேக நூலார், 'சம்பந்தர் சடகோபர் முதலாயினுரும் திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னுகப் பின்னுகப் பதிகங்கூறுவது காண்க' என உரைத்தது பிறிதொருசான்றாக வுள்ளது. இத்துணையும் இங்கு இடைப்பிற வரலாய்த் தொடர்ந்தன; ஆதலின் நிற்க.

இனி, இவ் வுரைபெறு கட்டுரையும் உரைநடைப் பதிகமே என்பது முன்னரே முடிந்தது. ஆதலின் இவ் வுரைப்பதிகம் மேற் செய்யுட்பதிகத்தொடுசேர, அதன் உரைவிரவிய பகுதியாய் ஒன்றி நிற்கும். ஆகவே 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்ற சிலப்பதிகாரக் காப்பியயாப்புப் பதிகத்துள்ளும் பயின்றதென்னலாம். இப்பதிகம் அக்காப்பிய நலனைக் கவினுறக்காட்டும் கண்ணுடி போல்வதாகலின் இதுவும் உரையிடையிட்டதாய் விளங்குதல் மிகவும் அருமையுடைத்தன்றே? இந்நயம் தோன்றவே இளங்கோவடிகள் இருபதிகத்தையும் ஒன்றாக இணைத்து வைத்தார் என்பது.

இனி உரைபெறு கட்டுரையும் மேலைப்பதிகமும் ஒன்றிய பொருளன என்பது நன்கு விவரிக்கத்தகும். காப்பியத்தலைவி-கண்ணகி கற்பின் தெய்வமாட்சியை,

'கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணுள் நெடுங்கணீ ருகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகம் திருகி
நிலைகெழு கூடல் நீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவள்'

என மேலைப்பதிகம் தோற்றுவாய் செய்துநின்றது. அத் தெய்வப் பெருமையைத் தெற்றென வுணர்த்தி முற்றமுடிப்பது உரைபெறு கட்டுரையாகலின், இரண்டும் பாயிரப்பொருளே பயந்து ஒன்றாய் இயைதல் நன்றாய் விளங்கும் என்பது. என்னை பாயிரப்பொருள் பயந்தவாறு? எனின், நூல்நுதல் பொருளான காப்பியத் தலைவியின் கடவுட் கற்பினை உணர்த்துதல் பாயிரப்பயனே என்பது மிகவும் வெளிப்படை. 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்'

நூலின் மூவகை உள்ளுறைகளில் முதன்மையானது. என்னை? பதிகத்தில் அது மூன்றனுள் இரண்டாவதாக மொழியப்பெற்ற தன்றோ? எனின், அவற்றுள் அது நடுநாயகமாய்த் திகழ்தலின் முதன்மையதே யாம். அன்றியும் கண்ணகியைப் புகழ்தலே காப்பியத்தின் உட்கோளாதலிற் கருத்துவேறுபாடு இல்லையாமன்றே? இது நிற்க.

மேல் எடுத்துக்காட்டினுள் 'பத்தினியாகலின்' என்றதற்கு 'ஆக்கலும் அழித்தலும் வல்லளாகலின்' எனப் பழைய உரையாளர் பொருளெழுதிச் சென்றனர். அது மிக்க நயம்பாடுடையது. அவ்வாறு கொள்ளாக்கால், 'பத்தினியாகலின்........பத்தினியாகுமிவள்' என்று சித்தலைச் சாத்தனார் செங்குட்டுவனைத் தெளிவித்தற்கு எதுவாதலி எடுத்துக் காட்டியதிற் பொருட்சிறப்பு இன்றாய் ஒழியும். எனவே ஆக்கலும் அழித்தலும் ஆகிய இருவகை ஆற்றலுள், பதிகத்தில் 'நிலைகெழுகூடல் நீளெரியூட்டிய' என்றதனால் கண்ணகியின் அழித்தல் வன்மையும், கட்டுரையில் 'நாடு மலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது' என்றதனால் ஆக்கல் வன்மையும் புலப்பட நின்றன. இங்ஙனம் இரண்டும் ஒன்றாய் இயைதல் இனிது விளங்கும் என்பது. அன்றியும் பதிகத்திற் கண்ணகி ஒரு பெருந்தகைப் பெண்; கட்டுரையிற் கண்ணகி ஓர் அருந்திறல் அணங்கு. அவள் அகம் வெதும்ப அனல்கொளுத்தியது அங்கு; அவள் மனங்குளிர மழைபெய்வித்தது இங்கு. இவ்வாறு அழற்றெய்வமும் மழைத்தெய்வமும் அவள் ஆணைவழி நிற்றல் காட்டிக் காப்பியத்தலைவியின் கற்புத்திறனை இளங்கோவடிகள் விளங்கவைத்த அருமைதான் என்னே!

என்னை? நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய, நாடுமலிய மழை பெய்தது என்னுமளவே கட்டுரையிற் கண்டது. அதனால் மழைத் தெய்வம் அவள் ஆணைவழி நின்றதெனல் எவ்வாறு பெறலாம்? எனின் கூறுவேன்.

> 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை'

என்பது பொய்யாமொழி. அதற்கு நல்லுரைகண்ட பரிமேலழகர், அதனாற் போந்தபொருளை முடித்துக் காட்டுகின்றவர், 'தெய்வம் தான் ஏவல் செய்யும் என்பதாம்' எனத் தெற்றென உரைத்தது

யாவரும் மகிழ்ந்து இன்புறற்பாலது. பெய்யும் மழை என்பது வெளிப்படைச் சொல்லன்றிக் குறிப்புமொழியாய், அங்கு அப் பொருள் உணர்த்திற்று. கடவுள் வாழ்த்தடுத்து வான்சிறப்புக் கூறிய வள்ளுவனார், மழையினைத் தெய்வமாகக் கொண்டமை மலை யிலக்கு. ஆதலின், 'தங்கள்நா யகரில் தெய்வம் தவம்பிறிது இல என்று எண்ணும் மங்கைமார்' பொருட்டு மழைபெய்தது என்றால், அதன் கருத்து மழைக்கடவுள் தான் ஏவல்செய்தது என்பதாம். வான்வேண்டிற் றருகிற்கும் கற்பினளே' என்றாற்போலப் பிறாண்டு வருவனவும் எல்லாம் இக்கருத்தே பற்றியன.

இஃது இன்னுஞ் சிறிது விளக்கற்பாலது. மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்'

எனத் தெய்வவாக்கால் இத் திருக்குறளை எடுத்தாண்டுள்ளார். இங்குப் 'பெருமழை' என்றதொடர் பெரிதும் நயமுடையது. அது மழையின் தெய்வப் பெருமையே குறிப்பதன்றி வேறன்று. மற்று 'பெரும் பெயல்' எனவும் பொருள்தருமால் எனின், அது நாட் டினை நலியும் இடர் எட்டின் பாலதாய் விபரீதம் விளைக்கும் என்க. 'விட்டில் கிளிகால்வாய் வேற்றரசு தன்னரசு, நட்டம் பெரும்பெயல்காற் றெட்டு' என்றதனால் எண்வகை இடர் அறிந்து கொள்க. 'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்' என்பது பண்டையோர் வழக்கு. இதனால் சீத்தலைச்சாத்தனாரும் மேற்பரி மேலழகர் கொண்ட கொள்கையே உடையர் என்பது தெளிவாய் விளங்கும்.

இனி, இவ்வாசிரியர் இளங்கோவடிகள் தாமும், இத்தெய்வத் திருக்குறளைச் சொற்பொருள் விரித்தல் நயம்பட இச் சிலப்பதி காரத்தில் எடுத்தாண்டிருப்பது கண்கூடு. அது,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து'

என வருவதாம். திருக்குறளில் 'பெய்யும் மழை' என்றதற்கு ஈடாகவே 'தெய்வந் தொழும்' என்ற தொடர் ஈண்டுப் பயின்று வந்தது. ஆகவே, 'பெய்யும் மழை' என்ற விடத்தில், 'தெய்வம் தான் ஏவல் செய்யும் என்பதாம்' என்று எழுதிய பரிமேலழகர் உரைத்திறம் பாராட்டுக்குரியதாதல் சொல்லாமையே அமையும். 'இத்துணை யன்றியும் இறைவன தருளால், உய்த்துணர் வுடைய வோர் உண்மை யாளன்' என அவரைக்குறித்து ஆன்றோர் வழங்கிய பெருமை மிகவும் அருமையுடைத்தன்றே? இது நிற்க.

இதுகாறுங் கூறியவற்றால் இக்காப்பியத் தலைவியான கடவுட் பத்தினிக்கு, ஆரழலும் கார்மழையும் ஆணைவழி நின்றன என்பது இருபகுதிப் பதிகத்தானும் முற்றமுடிந்த பொருளாயிற்று. இனி இவ் வுரைபெறுகட்டுரையின் தொடக்கத்தில் 'அன்று தொட்டு' என்றது, கண்ணகி 'ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்' என்று வெஞ்சினம் விளியாது வஞ்சினங்கூறி மதுரை எரியூட்டிய அன்று தொடங்கி என்றவாறு. அன்று 'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளிவாரம்' என்ப. மேல், கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தன் ஆடித் திங்களகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை எடுத்ததும் இதுபற்றி என்க. என்னை? ஈண்டு அடியார்க்கு நல்லார் வேறு உரைத்தாரால் எனின், நன்று. அதுவும் பொருந்துமாறு நோக்கிக் கொள்ள அமையும் என்பது. மன்னனையே அன்றி மதுரையையும் அழித்தது, கண்ணகி நல்லாள் கடுந்தண்ட மிழைத்ததாய்க் காவியச் சுவையின் இழுக்காதோ? எனின் அன்று; அவள் ஓர் ஆராஞருற்ற வீரபத்தினி ஆகலின், அச்செயல் அவளது வீரப்பண்பினை மிகுவித்துக் காவியச்சுவையின் அழகூட்டுமென்பது.

'பாண்டிநாடு மழைவறங்கூர்ந்து வெப்புநோயும் குருவுந் தொடர' என்றது, கண்ணகியின் கற்புத்தீ மதுரையை எரித்தலானே அதன் பின்விளைவாக நாடுமுழுதும் வெதும்பச்செய்து நலியத் தொடங்கினமை கூறியவாறு.

'கொற்கையிலிருந்த' என்றது, முன்னர் மதுரை பாழ்பட்டமை குறிப்பித்தவாறு.

'வெற்றிவேற்செழியன்' என்றது, பொல்லாங்கு புரிந்த பொற் கொல்லரை ஒறுத்தற்கு உறுப்பான வேலின்கொற்றம் விளக்கிய வாறு.

'பொற்கொல்லர்' என்றது, காவலன் தேவியின் சிலம்பைக் கவர்ந்து கோவலனைக் கொலைபுரிவித்த பொற்கொல்லனோடு உடன் குற்றப்பட்டார் பிறரையும் உளப்படுத்தி நின்றது.

'ஆயிரவர்' என்றது பலர் என்னும் குறிப்புமொழி. 'ஆயிரவ ரானு மறிவிலார் தொக்கக்கால்' 'ஆயிரங் காக்கைக்கோர் கல்' என்பன காண்க.

'கொன்று' என்றது, 'பைங்கூழ் களைகட்டது' நோக்கச் சாதி தருமமாகிய கொலைத்தொழிலால் ஒறுத்து என்றவாறு.

என்னை? இங்ஙனம் கொடுந்தொழில்புரியக் காண்டலால் கண்ணகியின் தண்ணளிக்குக் கண்ணழிவுவருமால் எனின்; அற் றன்று. அவளுக்கு இழைக்கப்பட்ட கொடுவினையின் கணிப்பரிய தன்மை நோக்கி அதற்குக் கழுவாயாக இத்துணையுஞ் செய்ய வேண்டிற்றென்பது. நல்வினை தீவினைகள், அவ்வவ் வினையளவாக வன்றி வினைசெய்யப்பட்டார் தகுதியளவாகச் சிறந்து, மிகுபயன் விளைக்கும் என்பது அறநூற்றுணிபு.

'உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து'

'இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்'

இவை நல்வினை, செய்யப்பட்டார் தகுதிக்கேற்ப மிகுபயன் விளைத் தல் கூறின.

'எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்'

'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது'

இவை தீவினை, செய்யப்பட்டார் தகுதிக்கேற்ப மிகுபயன் விளைத் தல் கூறின. பிறவும் அன்ன.

அப் பெரியார் இவ்வாறு ஆணையுடையராயினும் உயிர்கள் மாட்டு அருளுடையர் என்று கூறுப.

'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'

என்னுந் திருக்குறளுரையான் அது தெளியக்கிடந்தது. அவ்வன்ன சால்பினளாய கண்ணகியும் அவ்வாறாணையும் அருளும் ஒருங்குடையளாகலின் குற்றஞ்செய்தாரைக் கொலைபுரியக் காண்டலால் அவள் தண்ணளிக்குக் கண்ணழிவுவருமென்றல் அமையாதாம் என்பது.

என்னை? நீத்தார்பெருமைக்குக் கூறியது கண்ணகிபெருமைக்குக் காட்டாகாதெனின், அற்றன்று. தவத்தானாய பெருமையினும் கற்பானாய பெருமை சிறிதும் தாழ்வுடைத்தன்று. இரண்டனையுஞ் சீர்தூக்கி முன்னையதிற் பின்னையது சிறப்புடைத்தென்றுங் கூறுப. ஆகலின் 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும்' ஆகிய இரண்டிடத்தும் ஆணையும் அருளும் ஒருங்காகச் சிறக்குமென்றல் சிறிதும் இழுக்காதென்பது.

தவத்தினுங் கற்புச்சிறத்தல், இச் சிலப்பதிகாரக் காடுகாண் காதையின் தெளிபொருளுமாகும். ஆண்டு வயந்தமாலைவடிவிற் கோவலனைவஞ்சித்த வனசாரிணியாம் மயக்குத்தெய்வம் 'புனமயிற் சாயற்கும் புண்ணியமுதல்விக்கும் என்திறமுரையாது ஏகு' எனத் தவமுதியோளான கவுந்தியினும்முற்பட, கற்பணங்காகிய கண்ணகி மாட்டுத் தன்பிழைபொறுமாறு வேண்டிக்கொண்டு அஞ்சி நடுங்கி அகன்றுபோயிற்று என்ப. 'தவத்தினுங் கற்புச் சிறந்ததாகலின் முற்கூறினர்; இவர் சாயலும் அறனும் உடையரேனுந் தவறு கண்டுழிக் கணத்தின் வெகுண்டு சபிப்பரென்று அஞ்சி அவர்க்கு உரையாதொழி என்று இரந்தாளென்க': என்பது அடியார்க்குநல்லார் அருளிய விசேடவுரை. காடுகாண்காதையில் வம்பப்பரத்தையொடு வறுமொழியாளனை 'முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக் கவுந்தியிட்ட தவந்தருசாபங் கட்டியது' என்றவரலாறும் ஈண்டைக்கேற்ப நினைந்து இன்புறற்பாலது. பிறவும் அன்ன. இத்துணையும் இங்கு இடைப்பிறவரலாய் வளர்ந்தன; மற்றொன்று விரித்தலாகாமைப் போற்றுக.

இது நிற்க; இவ்வுரைபெறு கட்டுரையில், 'களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ப' என்றது களவேள்வி வேட்டு விழாக்

கொண்டாடியதோடு கண்ணகியின் சிறப்புக்கனல் ஆற்றுவிக்கும் வாயில்கள்நாடிச் சடங்குகள்பலவும் விதிமுறை இயற்ற என்றவாறு.

'நாடு மலிய மழை பெய்து' என்றது, அழற்கடவுள் தெறல் நீங்க மழைக் கடவுள் அளிதொடர்ந்தமை கூறியவாறு.

'நோயுந் துன்பமும் நீங்கியது' என்றது, நோய் செய்தவளும் தானே; அந்நோய் தவிர்த்தவளும் தானே; ஆயினள் கண்ணகி என அதிசயந்தோன்றப் பாராட்டியவாறு. நீங்கியதற்கு வினைமுதல் நாடு; ஆகலின் ஒருமையாற் கூறினார். பிறவும் அன்ன. விரிப்பிற் பெருகும்.

இவ்வாறே கொங்கிளங்கோசரும், இலங்கைக் கயவாகுவும், சோழன் பெருங்கிள்ளியும் அவட்குக் கோயில் எடுத்துக் கொண்டாடினமையால் நாட்டிற்கு நற்பயன் விளைந்தது என்று காப்பியத் தலைவியின் கற்புத்திறன் மேலும் மெய்ப்பிக்கப்பட்டது. கண்ணகி வழிபாடு தமிழகத்தன்றிக் கடல்கடந்த நாட்டினும் சென்று நிகழ்ந்தது; அங்கும் அவள் அணங்காய் நின்று அளிபுரிந்தனள் என்ற அற்புதம்தான் என்னே! இச்சிறப்பினை உட்கொண்டே மேல் வேட்டுவவரியில், 'ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய திருமா மணி' எனத் தெய்வமுற்றுரைத்தது என்க.

ஆண்டு அத்தெய்வங்கூறிய வரலாறு இக் கட்டுரையோடு இயைந்த தொடர்பினதாய்க் காப்பியச் சுவையிற் கழிபேரின்பந் தருவது. காவிரிப்பூம்பட்டினம் நீங்கிக் கண்ணகியும் கோவலனும் கவுந்தி துணைபெற்று மதுரை வழிக்கொண்டு நடந்தவர்கள், காட்டினிடை வேட்டுவர் சேரியில்,

> 'கடுங்கதிர் திருகலின் நடுங்கஞ ரெய்தி
> ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
> நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்கு
> ஐயை கோட்டத் தெய்யா வொருசிறை
> வருந்துநோய் தணிய இருந்தனர்.'

அப்பொழுது அங்கே வேட்டுவரின் வரிக்கூத்து நிகழ்ந்தது. அதனிடையே சாலினி என்னும் தேவராட்டி,

> 'இணைமலர்ச் சீறடி இனைந்தனள் வருந்திக்
> கணவனொ டிருந்த மணமலி கூந்தலை

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகுக் கோங்கிய
திருமா மணி'

எனத் தெய்வமுற்று உரைத்தனள். அதுகேட்ட கண்ணகி அதன் பொருளறிய மாட்டாளாய்த் தன் பெண்ணியல்பால் நாணமுற்று,

'பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி யென்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள்' நின்றாள்,

என்று சொல்லப்படுகிறது.

இத் தெய்வங்கூறிய திப்பியக்கிளவி கண்ணகியின் கடவுட் பெருமையை நன்கு நிலையுறுத்தவல்லது. இங்ஙனம் வேட்டுவ வரியில் வித்திய இத்தெய்வப் பெருமையின் விளைவு சிறிது சிறிதாக முதிர்ந்து, நூலிறுதி வாந்தரு காதைக்கண் முற்றுகின்றது. அவ்விளைபயனை உலகெங்கும் துய்த்தமை விவரிப்பது உரைபெறு கட்டுரையாகும். ஆகலின் இதன் இன்றியமையாச் சிறப்பு இனிது விளங்கும் என்க.

இவ்வாறு நூல்முதல் பொருளோடும் இயைந்து, மேலைப் பதிகத்து எஞ்சிநின்ற பொருளையும் முடித்து, இடையே சிங்கநோக்காகித் திகழும் இதன் செவ்வியை என்னென்றுரைப்பது? அன்றியும் சிலப்பதிகாரக் காவியக்கோவிலின் கடவுட்கண்ணகி திருவுருவத்தை வழிதிறந்து காட்டும் வாயில்நிலையாகவும் உதவும் இந்நூன் முகத்தின் அழகு பெரிதும் அதிசயமுடையதன்றே? இவ்வளவினும் சிறக்க, இக் கட்டுரை இந்நூலுக்கு ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாகவும் இயைந்து மங்கலம் பயக்கும் மாண்பு எண்ணி எண்ணி இன்புறற்பாலது.

இவ்வாறெல்லாம் சொல்லாற்சுருங்கிப் பொருள்பெருகாநின்ற இவ்வுரைபெறுகட்டுரை ஒன்றுதானே, எத்துணையோ பல இன் பொருட்பயன் விளைக்குமாறு ஈண்டு இயற்றிவைத்த ஆசிரியர் இளங்கோவடிகளின் காவியசிற்பக் கலைத்திறமை என்போலியர் வியத்தற்கு எளியதன்று. ஆகலின் இவ்வளவே அமையும்.

இசைப் பயன்

சங்கீதபூஷணம், திரு. க. முத்துக்குமாரசாமி அவர்கள், வரகூர்.

"ஏழிசையாய் இசைப்பயனாய்" என்ற பெரியோர் வாக்கை ஆயும்போது ஈசன் இசைவடிவமாக நின்று எல்லா உயிர்கட்கும் பயன் தருகிறான் என்னும் உண்மைப் பொருளை யறியலாம். தில்லைத் திருக்கூத்தின் தத்துவப்பொருளை உன்னும்போது தெய்வக் கலையாம் நாடகக் கலை யொளியின் தெளிவைக் காணலாம். இசை, நாடகம் என்ற இரண்டும் இயற்றமிழ்க் கருத்துக்களை மக்கள் மனத்தில் எளிதில் புகச் செய்யும் இயல்புடையன. நோயைத் தீர்க்கும் நல்ல மருந்தைத் தேன், வெல்லம் முதலிய அநுபானங்களுடன் கலந்து தருவதைப்போல அறிஞர்கள் பயன்தரத்தக்க உண்மைக் கருத்தை மக்களுக்குப் பாடல், ஆடல் முதலியவற்றுடன் கலந்து ஊட்டி நலம் வளர்ப்பாராயினர்.

'சந்தமுள்ளோர் பாடவேண்டும்; அந்த முள்ளோர் ஆடவேண்டும்' என்ற பழமொழி தகுந்த பொருளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தவழ்கின்றது. இனியகுரல் அமையப்பெற்றோர் பாடல்தான் எழிலும் தெளிவும் தோன்ற ஏதுவாகின்றது. அங்க அமைப்புக்கள் நன்கு வாய்க்கப் பெற்றோர் ஆடினால்தான் அது கண்களுக்கும் கருத்துக்கும் நல்விருந்தாகிறது. புலவர்கள் குரலினிமைக்குக் குயில் கூவுவதையும், அழகிய ஆட்டத்துக்கு மயில் ஆடுவதையும் சிறந்த உதாரணமாகக் காட்டுவர். எழிற்றமிழ்ப் பூங்காவிலே புகுந்து இளைப்பாறும் இளங்கோவடிகள்,

> "பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடக்
> காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி"

என்று காவிரிநங்கையை நோக்கிக் கூறுகின்றார்.

இனிமையும், தெளிவும், நல்லகருத்தும், மென்மையும் கூடிய இசையானது இயல், நாடகம் என்ற இரண்டுக்கும் நடுநின்று இறைவன் சுடர்க்கண் போன்று விளங்குகின்றது.

மக்களாகப் பிறந்து இம்மையில் சுவைக்க வேண்டிய இன்பங்களுள் இசையின்பமும் ஒன்று. இசை என்பது செவிப்புலன் வழியாகச் சென்று உயிர்களுக்கு இன்பம் தரக்கூடிய இனிய ஓசையாகும். குயில் முதலிய உயிர்களிடத்தில் இயற்கையாகவே இன்னோசை எழக்கூடிய அமைப்புள்ளது. ஆறறிவுடைய மக்கள் தமக்கு இயற்கையாய் அமைந்த மிடற்றினாலும், செயற்கை முறையில் பலவித கருவிகளாலும் இன்னோசை எழுப்புகின்றார்கள்.

சொல்லில் இயைந்த இசையை மக்களன்றி மற்ற உயிர்களால் இயக்கமுடியாது. கருவிகளாலும் சொல்லின்பத்தைக் காட்ட முடியாது. ஆகையால் மக்கள் கண்டத்திலிருந்து எழும் இசை மற்றெல்லா இசைக்கும் மேலாக விளங்குகின்றது.

இயற்றமிழ்ப் புலவர்கள் செய்யுட்கள் இயற்றும்போது விதிப்படி சொற்கள் நிறைந்து மிகுந்த இடங்களை அசை, அளபெடை முதலிய இசை முறையால் நிரப்புகின்றனர். ஒரு இயற்பாடற் கருத்தைச் சாதாரணமாகக் கூறினால் உணர்வோர் சிலரேயாவர். அக்கருத்தையே இசைப் பாடலாக்கிப் பாடினால் கேட்போர் பலராவர். இதன் உண்மையை "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்ற வாக்கின் பொருளால் நன்கு உணரலாம். ஒரு செம்மையான வாக்கியத்தை இசையில் பொருத்தி இசையின் நுட்பங்களைப் பயன்படுத்தி எத்தனைதரம் திருப்பித் திருப்பிப் பாடினாலும் (நிரவல் செய்தாலும்) அவ் வாக்கியத்தில் ஒவ்வொரு தடவையிலும் புதியதொளி உண்டாகிறது. கூறியதுகூறல் என்ற பிழை இங்குத் தோன்றுவதில்லை.

உள்ளத் துணர்ச்சியால் தோன்றும் வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பனவற்றை அபிநயக் கூத்தின்மூலம் வெளிப்படுத்த முடியுமாயினும் அவ்வபிநயத்தோடு கூடிய இன்னிசைப் பாடல்களின் வாயிலாகவே அச்சுவைகளை நன்கு உணரமுடிகின்றது. கதை தழுவிய கூத்தும் பிறவும் இசையாலேயே சிறப்புநிலை எய்துகின்றன.

பாடல்களில் இசையரங்குப் பாடல்களைத் தனியாகவும் நாடகப் பாடல்களைத் தனியாகவும் பிரித்து இரு வேறு வகையாகக்

கொள்ளவேண்டும். நாடகங்களில் தகுதியற்ற இடங்களில் இராகம் பாடுவதும் சுரம்பாடுவதும் பொருத்தமற்றதாம். இந்துஸ்தானி, பாரசீகம் முதலிய மெட்டுகள் நாடகத்தின் வழியாகப் புகுந்து நமது மேலான இசைமுறையைக் கெடுத்துவருகின்றன. 'தமிழ் எனது உரிமை, தமிழ் எனது உயிர்' என மேடையில் முழங்குவோர் அந்தமெட்டுகளை நாடகங்களில் ஏன் புகுத்துகிறார்கள்? இனியேனும் அச்செயலை ஒழித்திடுக.

தொழிலாளர்கள் இயன்றவரை இசையைப் பயன்படுத்தித் தம் தொல்லை அறியாமல் எளிதாகத் தம் வேலையைச் செய்துமுடிக்கிறார்கள். 'ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்பது பழமொழி. உலகத் தொழில்களுள் சிறந்தது உழவுத்தொழில். உழவனும் உழவனின் குடும்பத்தினரும் ஏற்றம் இறைக்கும் போதும், ஏர் ஓட்டும்போதும், நடவு நடும்போதும், களை யெடுக்கும் போதும் பாடிக்கொண்டே களைப்பறியாது வேலைசெய்வதை நாம் நேரில் காண்கிறோம். எப்படிப்பட்ட வறிய துயர்நிலையையும் மறக்கச் செய்யும் வன்மை இசைக்கு உண்டு. வாழ்விற்கு இன்றியமையாததாய் இருப்பதும் இருக்கவேண்டியதும் ஆகையால் இசைக்கலை மற்றெல்லாக் கலைகளிலும் சிறந்ததாகத் திகழ்கின்றது. பாடுவதால் பாடுவோரின் குரல் உரம்பெறுவதோடு மார்பிலுள்ள தசைகளும் சுவாசநாலகளும் வலிமைபெற்று அதனால் காசம், இருமல், கபம் முதலிய நோய்கள் தடுக்கப்படுகின்றன. கருவிகள் பயில்வோரும் கூட நல்ல உடற்பயிற்சி பெற்றவராகின்றார்கள். உண்மையான நல்லிசை உளத்தூய்மை செய்யும் என்பது அறிஞர்கள்கண்ட உண்மை. உயர்ந்த நல்லிசைப் பாடல்களால் பக்தி, தியானம், மெய்ஞானம் முதலிய மார்க்கங்கள் யாவும் ஏற்படுகின்றன. இவ்விதமாக இசைக்கலையானது உழைப்பாளர்களின் உயர்நட்பாகவும், மனத்துயரோட்டும் மருந்தாகவும், கலைவாணருக்கேற்ற இனிய விருந்தாகவும், உடல்நலம்செய்யும் உணவாகவும், உள்ளத்தூய்மை பெற உறுதுணையாகவும், ஆன்ம இலாபம்தரும் அமிழ்தாகவும் திகழ்ந்து மக்களுக்குப் பலவகையில் பயன் தருகின்றது.

இசை ஒரு தெய்விகக் கலை. இசை நிகழ்ச்சி நடத்தும் ஒருவன் அதேசமயத்தில் எட்டுவிதமான காரியமும் செய்கிறான். 1-பாடுதல், 2-தாளம்போடுதல், 3-சுருதியுடன்சேருதல், 4-தாளத்துடன் ஒத்து நடத்தல், 5-பொருள் விளக்கல், 6-கற்பனை செய்தல், 7-ஒலியழகுசெய்தல், 8-அவையோரைக் கவனித்தல். இவையன்றி, *பாடற்குற்றம் தொழிற்குற்றம் முதலியவை நீக்கியும் பாட வேண்டும்.

நம்நாட்டில் ஆதாரச் சுருதியை மாற்றுமல் பாடுவது முறையாதலால் தம்பூரா என்ற சுருதிக்கருவி நமக்கு மிக மிக அவசியமாகும். பிறநாட்டில் ஏராளமான செலவில் கருவிகளால் அடையும் இன்பத்தை நம்நாட்டில் நம்இசையில் தம்பூரா ஒன்றினால்கூட அடையலாம்.

ஆலயங்களில் இறைவன் பூசையின்போதும் விழாக்காலங்களிலும் இன்னிசைக் கருவியான நாகசுரம் முறையோடு வாசிக்கச்செய்வதால் அன்பர்களின் மனம் ஒருமுகப்படும். இஃதுணராத சில ஆலயக் கண்காணிப்பாளர்கள் சிக்கனம் செய்வதாக நினைத்து நாள் தொறும் இறைவன் சன்னிதியில் வாசிக்க நன்குபயிலாத நாதசுரக் காரர்களை நியமித்துள்ளார்கள். இச்செயல் குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்ட தொக்கும். இசைவடிவமான இறைவன் திருமுன் செவிக்குணவான இன்னிசைக் கருவிகள் முழங்கச்செய்வதோடு செவிக்கும் உள்ளத்துக்கும் உணவான தெள்ளிய தமிழிசைப் பாடல்களையும் பாடச்செய்வது இன்றியமையாத செயலாம்.

இசைப் பாடல்களிற்சில, இசை நயத்தையே முதன்மையாகக் கொண்டு செல்கின்றன. சில, பொருட்சிறப்பையே கருதுகின்றன. இசைப்பாடலில் இவ்விரண்டும் தெளிவுறப் பொருந்தி ஒருங்கு அமைவதே சிறந்த பயன்தருவதாம். இசையாளர்கள் ஓரளவாவது மொழிப்பயிற்சி பெற்றிருக்கவேண்டிய தவசியம். மொழிப்பயிற்சி பெறாத சில இசைப்புலவர்கள் சொற்களைப் பிய்த்துச் சுவைத்து எழுத்துக்களை விழுங்கி ஏப்பமிடுகின்றனர். சிலர் தமிழா, பிற மொழியா? என்பது விளங்காதவகையில் பாடுகின்றனர்.

* திருவிளையாடற்புராணம் விறகுவிற்ற படலம் 29, 30-ம் பாடல்கள் காண்க.

தமிழ்வேதப் படிகளென விளங்கும் பொதுமறைத் திருக்குற ளின் கடவுள் வாழ்த்தையும், மூவர் தமிழிலும் முதற்பாடல்களான "தோடுடைய செவியன்", "பித்தா பிறை சூடி", "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற தேவாரப் பாக்களையும் சிறப்பான ஆழ்வார் பாசுரங்களையும் திருப்புகழ் முதலியவற்றையும் தமிழ் நாட்டுப்பள் ளிகளில் நன்கு இசையோடு சொல்லழகும் தோன்றப் பயிலச் செய்து, சிறப்பாக நாடோறும் பள்ளி ஆரம்பத்தில் பயிலச்செய்வது மிக நலன் பயப்பதாம்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை"—(திருக்குறள்)

ஒருவனுக்குப் பெயரளவில் செவியிருந்தும் நல்லோசையை ஆராய முடியவில்லையானால், ஒலிவேற்றுமையை உணரமுடியவில்லை யானால், இசையின் நுட்பத்தைப் பகுத்தறிய முடியவில்லையானால், இசையைச்சிறிதாவது அநுபவிக்க முடியவில்லையானால், இசை வடி வான இறைமாண்பின் நிலை அவன் உள்ளத்துக்கு எங்ஙனம் விளங் கும்?

பாண்டிய வேந்தர்கள் தம் தலைநகராகிய மதுரையம்பதியில் தனியாக இசைச் சங்கம் ஒன்று நிறுவி நல்லிசையை வளர்த்து வந் தார்களென்றும், அவ்வேந்தருக்கு 'இசையளவு கண்டான்' என்ற பட்டம் வழங்கிவந்துள்ளது என்றும், கி. பி. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கிச் சுமார் நானூறு ஆண்டுவரை தமிழ்நாட்டு வேந்தர்கள் தம் நாட்டிலிருந்த கோயில்களில் சமயகுரவர்களின் பாடல்களைத் தமிழ்ப் பண்களில் நாள்தொறும் பாடிவருவதற்கு நிவந்தங்கள் வழங்கிவந்துள்ளார்கள் என்றும், சோழமன்னர்கள் கோயில்களில் திருப்பதிகம் பாடும் தேவரடியார்களுக்கும் மற்றோ ருக்கும் பண்களைக் கற்பிக்கும்பொருட்டுப் பாணர்களை நியமித் திருந்தார்களென்றும் வரலாறு கூறுவதால் இசைத்தமிழ் முற் காலத்தில் செழிப்புடன் வளர்ந்து முழங்கிவந்துள்ளது என்று அறிகின்றோம். முற்காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, இசை

நுணுக்கம் முதலிய தமிழ் இசை நூல்கள் இருந்தன. பெருநாரை, பெருங்குருகு என்பவை தலைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டவை. இசைநுணுக்கம் சிகண்டி என்பவரால் இயற்றப்பட்டது. அவை இடைக்காலத்தில் அழிந்துபட்டன. நம்நாட்டில் வேற்று மொழி மாந்தர் ஆட்சிசெய்யப் புகுந்த காலங்களில் நம் இசையில் பிறமொழிப்பாடல்கள் புகுத்தப்பட்டன. தமிழ்மொழிப் பயிற்சியுள்ள இசையாளரைக்கண்டு ஆதரிப்பாரற்றதாலும், இசைக்கேற்ற உயர்ந்த தமிழ்ப்பாடல்கள் இயற்றுவோரை ஊக்குவித்து அப்பாடல்களைப் பரப்புவோ ரின்மையாலும், அக்காலத்தில் வேற்று மொழிப் பாடல்களே ஓங்கி நின்றன.

"புரியாத பிறமொழியின் இசையிலே—நல்ல
புத்துணர்வு தருகின்ற வலிமைதான் ஏது"

இசையின் நுட்பங்களைச் சொற்சுவையோடு பயின்று பாடுவதால் அறிவுதிருந்தி அருள்வழிச் சேரும் என்பதற்கு ஐயமில்லை. பண்டைநாள்முதல் சிறப்புடன் விளங்கிவந்த நம் தமிழிசை இடைக்காலத்தில் வீழ்ச்சியுற்று இப்போது மீண்டும் பல பெரியோர்களாலும் அறிஞர்களாலும் வள்ளல்களாலும் தளிர்விட்டுச் செழிப்புடன் வளர ஆரம்பித்திருக்கிறது. இறைவன் ஆலயங்களிலும் பிற நல்லிடங்களிலும் அரிய தமிழிசைப் பாடல்களைப் பாடச் செய்தலும் பாடுதலும் நாம் தமிழ்நாட்டுக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

வெண்பா.

தெய்வத் தமிழ்க்கவியின் தெள்ளிசையைப் பள்ளியிலும்
உய்விக்கும் ஈசன்முன் ஓதிமகிழ்—செய்வித்தே
ஓங்கு பயன்கண் டுணர்வடையும் நல்வழியில்
நீங்கறவே செல்வோம் சிறந்து.

கம்பரும் துளஸிதாஸரும்—௩

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

இராமன் வில்லிறுக்க எழும்வரை கம்பரும் துளஸிதாஸரும் ஒத்துப்பேசும் இடங்களைக் கண்டோம். இதனிடையே ஒரு நிகழ்ச்சி என் மனத்தை அலைய வைத்தது. இதுவரை எடுத்துக் காட்டிய கருத்தொற்றுமை யெல்லாம் இலக்கிய ரீதியிலே ஒத்திட்ட அழகிய ஒற்றுமைகளாகலாம்; சரித்திர ஆராய்ச்சி அடிப்படையிலே அவை எவ்வளவு தூர சந்தேகப் புயல்களை எதிர்த்து நின்று ஒருவரிலிருந்து மற்றவர் ஓரிரு அகப்பைகளை முகந்து கொண்டதாகக் கூறப்படும் கூற்றை நிலை நாட்டும்? என்ற ஒரு கேள்வியை அன்பர் ஒருவர் கேட்டுவைத்தார்.

என்னுடைய உண்மை நிலையைத் தெளிய எடுத்துக்கூறிவிடுகிறேன். துளஸிதாஸர் கம்பர்இயற்றிய இராமாவதாரத்தைக் குமரகுருபரர் மூலம் செவிமடுத்ததுண்டு என்று கேள்விப்பட்டது முதல் அதற்கு வெளியாதாரங்கள் உண்டா எனத் தேடி வந்தேன். அதை என் முதல் கட்டுரையில் குறித்தபடி சில குறிப்புக்களால் நான்நம்பினேன். அதுவரையில் சரியே. ஆனால் துளஸி கம்பர் பனுவலைக் கேட்டிருந்தால், அவர் கருத்துக்களைக் கையாண்டிருக்க வேண்டுமா? எனும் கேள்வி எழுந்தது. சீதையை இராமன் காணும் ஒரு நிகழ்ச்சியமைப்பே போதும் என்று முதலில் எண்ணினேன். இருப்பினும் மேலும் சில கருத்தொற்றுமைகள் காணப்படலாம் என்று நினைத்து, இரண்டு நூல்களையும் தொடர்ந்து ஆராய நேர்ந்தது. சிலசொற்றொடர்கள் வாக்கிய அமைப்புக்கள் என்மனத்தைக் கவர்ந்தன.

'வெள்ளி வெண் கடலின்......' என்ற செய்யுட் பகுதி கம்பராமாயணம் விபீடணனடைக்கலப்படலத்தின் கண்ணுள்ள (133) 'அள்ளி மீதுலகை வீசும்' என்ற பாடலில் ஒரு பகுதி. 'இது சிந்தாமணிப் பிரயோகமாக இருக்கிறது' என்று புலவர்கள் சொன்னபோது கம்பர் 'சிந்தாமணியிலிருந்து ஓரகப்பை முகந்துகொண்டேன்' என்று

ருந்துக்கொண்டதாக உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் சீவக சிந்தாமணி மூன்றும் பதிப்பின் முகவுரையில் சொல்கிறார்கள். அந்தப்பகுதியில் ' பாடபேதங்கள்கூட உள்ளன. என்னிடம் இருக்கும் இராமாவதாரப் பிரதியில் 'வெள்ளிய கடலின் மேலான்' என்றே இருக்கிறது. இந்தப் பாடவேறுபாடு உள்ள ஒரு சிறிய வாக்கியப்பகுதியை வைத்துக்கொண்டு, புலவர் 'சிந்தாமணி யிலிருந்து கம்பர் ஒரு அகப்பை முகந்துகொண்டார்' என்று சொல்லிக்கச் செய்ய ஏதுவாயிற்று என்று கண்டவுடன் எனக்கு விம்மிதம் ஏற்பட்டது. துளஸி-கம்பர் காவியங்களில் வாக்கியங்கள் அப்படியே மொழிபெயர்ப்புப் போலவே இருக்கின்றனவே என்று துணிந்தேன்.

இருப்பினும் இரண்டுநூலையும் தீர ஆராயத குறையினால் கொஞ்சம் ஒளிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். அதற்காகவே, இரண்டினுமுள்ள ஒற்றுமைகளைச் சொல்லிச் செல்லலாம்; முடிவில் எடுத்துக்காட்டப்பட்ட ஒற்றுமைகள் வலிமையுற்றன என்றால் நாம் எடுத்துக்கொண்ட கட்சி தானாகவே வலியுறுத்தப் பட்டுவிடும்; நாமாக ஒன்றும் ஊர்ஜிதம் செய்யவேண்டாம் என்று எண்ணினேன்.

இதனிடையே மற்றொரு நிகழ்ச்சி ஏற்பட்டது. உ. வே. சாமிநாதய்யாவர்கள் பதிப்பித்த ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டு எனும் நூலைப் பார்க்க நேர்ந்தது. அதன்கண் (1947-ம் வருஷப் பதிப்பு) ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சரித்திரச் சுருக்கத்தைக் கண்ணுற்று அதைப் படித்தேன். அதனிடை இவ்வாக்கியங்கள் வருகின்றன.

"இவர் (குமரகுருபரசுவாமிகள்) தாம் வாழ்ந்திருந்த மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே ஹிந்துஸ்தானி பாஷையிலும் தமிழிலும் புராணப் பிரசங்கமும் செய்ததுண்டு; சிறந்த இராமபக்தராகிய துளஸிதாஸர் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு உவந்தனரென்றும், 'கம்பராமாயணத்திலுள்ள கருத்துக்களைத் தாம் ஹிந்துஸ்தானியில் இயற்றிய இராமாயணத்தில் அமைத்துக்கொண்டனரென்றும் கூறுவர்."

இதைத் தமிழன்பர்கள் தாங்களே பார்த்திருப்பாரல்லர் என்ற எண்ணங்கொண்டு நான் எடுத்துக்காட்டவில்லை. இதை நான் படிக்க நேர்ந்தது தெய்வாதீனம் என்றுதான் சொல்லவேண்டும். இதைப்படித்ததும் என் எண்ணம் வலுப்பட்டதுடன் தொடர்ந்து இரண்டு நூல்களிலுமுள்ள ஒற்றுமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லிவிடவேண்டும் என்ற ஒரு ஊக்கமும் ஏற்பட்டது. வக்கில் வாதங்களில் பல இடங்கள் பலஹீனமாயிருக்கலாம். அதேபோல் என் ஈடுபாடு காரணமாக எடுத்துக்காட்டப்படும் ஒற்றுமைகள் வன்மையற்றனவாயிருந்தாலும் சிலவேனும் திண்ணமாய் என் கட்சிக்கு ஆக்கம் தரும் என்று உறுதிகொண்டு தொடர்கிறேன்.

மற்றும் ஒன்று. இருவரும் இராமகதையின் பல பகுதிகளைத் தம்விருப்பப்படியேதான் சொல்லிச் செல்கின்றனர். பரசுராமனைத் துளஸிதாஸர் இராமன் வில்லிறுத்தவுடனேயே சபைக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறார். அந்தக் கட்டத்தை நாடகச்சுவையுள்ளதாக ஆக்க இளையவனுடைய குணப்பண்பை நன்கு பயன் படுத்திக்கொள்கிறார். ஜனகன் சபையில் எல்லா அரசரும் குழுமியிருக்க இராமன் வில்லிறுக்கிறான். சீதாபிராட்டியை அவன் கொள்வான் என்று நிச்சயமாகிவிடுகிறது. அரசர் ஆர்த்தெழுந்து 'எங்களையும் வென்றால்தான் இராமனுக்குச் சீதை உரியவளாவாள்' என்று சூளுரைக்கின்றனர். மங்கையர் உவகை மங்குகிறது. அதேசமயம் பரசுராமனை அழைக்கிறார் துளஸி. அரசர்கள்நிலையை அப்பொழுதுபார்த்துச் சுவைக்கவேண்டும். பிறகு பரசுராமனுக்கும் இலக்குவனுக்கும் இடையே தொடரும் பேச்சுக்கள் சுவை தருவன. கம்பர் பரசுராம கர்வபங்கக்கதையை எப்படிச் சொல்லியிருக்கிறார் என்பதை அன்பர் அறிவர். ஆகவே இருவருக்கும் கதையை நிர்வகிப்பதில் எவ்வளவோ வேற்றுமைகள் உண்டு. அவ்வேற்றுமைக்குள்ளே திகழும் ஒற்றுமைகள்தான் என் மனத்தைக் கவர்கின்றன.

மணச் சடங்கு முடிந்தபிறகு மணமகன் அழகை வருணிக்க முனைகிறார் துளஸி. கம்பர் மணம் புரியுமுன்னுள்ள இராமனை வருணிக்கிறார். இருவரும் பூணூலைக்கூட மறக்காமல் வருணிக்கிறார்கள். இருவருமே 'ஒப்பனை யுரைக்க வொண்ணுமோ?' என்று கையிழந்தும் நிற்கின்றனர்.

இங்ஙனம் இருப்பினும் ஒற்றுமைகளை மட்டும் கண்டு செல்லலாம் என்ற எண்ணத்துடன் தான் நாம் இரண்டு காவியங்களையும் படித்துச் செல்கிறோம்.

கைவளையில் இராமனைக் காணும் சீதையின் முயற்சியைக் கம்பர் சொல்கிறதைக், கம்பர் அன்பர்கள் அறிவார்கள். அதைக் குறிக்கும் பாட்டு ஈண்டுளது:

> எய்யவில் வளைத்தது மிறுத்தது முரைத்தும்
> மெய்வினை விடத்துமுத லையம்விட லுற்றாள்
> அய்யனை யகத்துவடி வேயல புறத்தும்
> கய்வளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்.
>
> கோலங்காண் படலம்—37.

உரைகாண்பவர் சீதையின் அகத்தில் எழுந்த சந்தேகம்தீர நேரேயும் கண்டு தெளியவேண்டி வளையில் தோன்றும் பிரதிபிம்பம் மூலம் கண்டு உணர்ந்த அழகை ரஸிக்கின்றனர். திருப்தி ஏற்படாமல் வளையை நகர்த்தி நகர்த்தி நன்கு திருத்தி நல்நிலையில் வைத்து அய்யன் அழகிய திருமேனியைக் கண்டு மனமகிழ்ந்தாள் என்று சுவைப்பவரும் உண்டு. இதை அன்பர்கள் எவ்வளவோ முறையில் ரஸிக்கின்றனர். கம்பர் சொல்லும் இராமாயணத்தில், சீதைக்குச் சந்தேகம் எழல் அவசியமாயிற்று. அதைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியம் ஆயிற்று.

ஆனால் துளஸிக்கோ இந்த அவசியமே இல்லை. அவர் 'ராம சரிதத்தில்' இராமன் சீதைக்கெதிரே தான் வில்லை இறுக்கிறான். ஆனாலும் துளஸிக்கு இந்தக் கண்ணாடிவளையில் கணவன் அழகைக் காணும் கருத்தை விட்டுவிடத் துணிவில்லைபோலும்! அதனால் அவர் இந்தக் கருத்தை வேறோர் இடத்தில் வைத்து ரஸிக்கிறார். அவரிடம் இந்தக் குணம் உண்டு. உதாரணமாக இராமன் சொல்லியதாகக் கம்பர் சொல்லும் வார்த்தைகளை அவர் கோசலை வாய்வழி சொல்லவைப்பார். வார்த்தைகள் அவைகளே. ஆனால் சொல்லுவது மட்டும் வேறு ஒருவராக இருப்பர். அழகு குன்றாது ஒரு மெருகு ஏறும். உதாரணம், சந்தர்ப்பம் வரும்போது பார்க்கலாம். அதே போல் சில சமயம் கம்பர் கருத்துக்கள் இடம்மாறியும் வரும்.

இனி துளஸி இந்தக் 'கைவளை' அழகை எப்படிநிர்வகிக்கிறார்? பார்க்கலாம்.

கைபிடித்து, அக்னி வலம் வந்து ஆசீர்வாதம் எல்லாம் ஆன பிறகு மணமான நவதம்பதிகளைக் குலதெய்வத்தின் கோவிலுக்கு அழைத்துச் செல்கின்றனர் பெண்கள். அங்கே,

"நிஜ பாணி மனி மஹம் தேகி ப்ரதி மூரதி ஸரூப் நிதான கீ
சாலதி ந புஜவல்லி விலோகனி விரஹ பயபஸ் ஜானகீ!"

ஜானகி தன் கையிலுள்ள (வளைகளின்) மணிகளில் அழகின் எல்லையான இராமனுடைய பிரதிபிம்பத்தைக் கண்டு கையை அசைக்காமல் நிற்கிறாள்; அவளுக்கு, அசைத்தால் அவனைக் காண்பது மறைந்துவிடுமே; அதனால் துக்கம் ஏற்படுமே என்ற பயம்!

இது கண்டிப்பாகக் கருத்தை விடக்கூடாது என்ற எண்ணத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கட்டம் என்பதற்கு அரைமணி நேரம் வாதாடவா வேண்டும்?

இனி அயோத்தியாகாண்டம் செல்லலாம். அந்தக்காண்டத்தின் கதை பின்வரும் செய்யுள்கொண்டு ஆரம்பிக்கிறது:

மன்னனே யவணியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்ன மூலத்தினிற் கழற வந்தென
பின்னருங் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்.

காதடியில் ஒரு கருமயிர் நரைத்தது. அது அரசன் காதில் 'மகனுக்கு அவனியைத் தந்து தவம்புரி பருவமிது!' என்று கழற வந்தென இருந்ததாம். அதை 'அவனிகாவலன் படிமக் கண்ணடியாங்கதிற் கண்டனன்!'

இதிற் "கழற வந்தென" என்றால், வந்தது எது? இதையே துளஸியும் சொல்லுகிறார், கேட்போம்:

"ராவ சுபாவ முகுர கரலீன்ஹா
ச்ரவண சமீப பயே சித கேசா
மனஹுரம் ஜடாபன அஸ உபதேசா
ந்ருப யுவராஜ ராம கஹம் தேஹு
ஜீவன ஜன்ம லாப கின லேஹு"

பொருள் இதுதான்: அரசன் இயற்கையாகக் கண்ணாடியைக் கையில் எடுத்தான். காதருகில் மயிர் வெளுத்திருந்தது; கிழப்பருவம் இந்த உபதேசத்தைத் தருவது போலும்; 'அரசே இராமனுக்கு யுவராஜப் பதவியைத் தந்து பிறவி, வாழ்க்கை இவற்றின் பயனை ஏன் பெற்றுக்கொள்ளக்கூடாது?'

ஸ்ரீ உப. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை எழுதிப் பதிப்பித்திருக்கும் அயோத்தியா காண்டத்தில் இந்தச் செய்யுளும் கண்ணாடியில் அவனி காவலன் பார்ப்பதைக் கூறும் அடுத்த செய்யுளும் காணப்படுகின்றன. அதன் அடியில் உரையாசிரியர் 'சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன; கதைத் தொடர்ச்சிக்குப் பொருத்தமாயிருத்தலாற் கொள்ளத் தக்கன' என்று அச் செய்யுட்களைப்பற்றிக் குறித்திருக்கிறார். அதனாலும் துளஸியும் அதைச் சொல்லியிருத்தலாலும் நாமும் கொண்டோம்.

இனித் தயரதன் மந்திராலோசனை நடத்துவதைக் கம்பநாடர் கூறுகின்றார். வசிட்டர் மந்திரிகள் எல்லோரும் அதே இடத்தில் வந்து சேருகின்றனர். தசரதன் தன் விருப்பத்தைச் சொல்ல, அமைச்சர் இரண்டு கன்றுகளுக்கு இரங்கும் நிலையொத்த மனநிலையை யடைய, வசிட்டர் கூறத் தொடங்குகின்றார். பேச்சினிடையே அவர்,

"புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்......"

மந்திரப்படலம்—39.

என அவதாரரஹசியத்தைச் சொல்லிவிடுகிறார்.

துளஸிதாஸரும் வசிட்டர் வாயாலேயே,

"ஸுநு ந்ருப ஜாஸு விமுக பசிதாஹீம்
பய உ தம்ஹார தனய ஸோயீ ஸ்வாமீ"

'கேள் அரசனே, எவரை மறந்தால் இரங்க நேரிடுமோ அவரே உன் மகனாயவதரித்தார்' என்று சொல்கிறார்.

கம்பநாடருடைய வசிட்டருக்கு 'இராமன் புவனி காக்க வல்லவன்' என்று வலியுறுத்த அவன் 'அறத்தின் மூர்த்தி' வந்து அவதரித்தான் என்று சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. துளஸி சொல்லும் சரித்திரத்தில் தயரதன் முதலிலேயே வசிட்டரிடம் தான் செல்கிறான். 'நான் உயிருடன் இருக்கும்போதே இந்தப் பட்டாபிஷேகத்தை நடத்திவிடவேண்டும் என்று ஆவலுறுகிறேன்; நடத்தி விடுங்கள்' என்று வேண்டுகிறான். அந்த இடத்தில் இதைச் சொல்ல என்ன அவசியம்?

இனி நாம் கூனி தோன்றும் காட்சிக்குச்செல்லலாம். அதற்கு முன் ஒன்று கவனிக்கவேண்டும். சில இடங்களில் வால்மீகி தெளிய வைக்காத சில சந்தேகங்களைக் கம்பநாடார் தெளிய வைத்திருக்கிறார், என்பார்கள் படித்த பெரியோர்கள்.

கம்பராமாயணத்தில் இச் செய்யுளைப் பாருங்கள்:

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயையும் மவர் பெற்றுள வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய அருந்தவத் தாலும்;

மந்தரை சூழ்ச்சிப்படலம்—77.

இதில் இமையோர் மாயையும் சூழ்ச்சியும் எது? வேறு எங்காவது அது விளக்கப்பட்டுள்ளதா? துளஸியைக் கேட்டால் அதற்குப் பதில் கிடைக்கும். அந்தக் கதையைக் கேளுங்கள்:

நகரில் எல்லோரும் ஆனந்தமாய் இருந்தனர். ஆனால் தேவர்களுக்கு இது பிடிக்கவில்லை. திருடர்களுக்கு நிலவொளி யிரவு எப்படி இனிதாகும்? அவர்கள் சரஸ்வதியைக் கூப்பிட்டனர்; காலில் விழுந்து வேண்டினர்; 'எப்படியாவது இராமனைக் காட்டிற்கு அனுப்பி எங்கள் நலன் தேடித்தாருங்கள்' என்று. இதைக் கேட்ட சாரதை தனித்துநின்று வருந்தினள்; 'தாமரைக் காட்டில் பனியாகப் பொழிய நானா போகவேண்டும்?' என்று. தேவர்கள் மீண்டும், 'தாயே இதில் உனக்கு ஒன்றும் குறை வாராது; உனக்கு இரகுநாதன் குணம் தெரியாதா? அவன் சுகம் துக்கம் இரண்டையும் சமமாகப் பார்ப்பவன் அல்லவா? நீ தேவதைகளுக்காக அயோத்திபோய் வா?' என்று வேண்டிக்கொண்டு அவளை அனுப்பி வைத்தனர்.

துளஸி மேலே சொல்லப்பட்ட கதையை வருணித்துவிட்டுப் பிறகு கூனியைக் கொண்டுவந்து நிறுத்துகிறார். 'கைகேயியின் சேடி ஒருத்தி; அவள் பெயர் மந்தரை என்பது; சுத்த அறிவிலி; அவள் தலையில் பழியைச் சுமத்த சாரதை தந்திரம் புரிந்தாள்; அவள் புத்தியைத் திரியவைத்துச் சென்றாள்:' என்கிறார்.

இனிக் கம்பராமாயணத்திலுள்ள மந்தரை-கைகேயி சம்பாஷணையை எடுத்துப் படியுங்கள். கைகேயி சிந்தை திரிய மந்தரை என்ன புதிதாகச் சொல்லிவிட்டாள்? உணர்ச்சி அண்டப்பட்டதைத் தவிர வாதத்தில் ஒன்றும் புதியபொருள் காணோம்: அதனால் தானே கம்பநாடரும் கடைசியில், மந்தரை கோபம், அவள் வாதம் எல்லாவற்றையும் திறம்பட உரைத்தும் கைகேயி சிந்தை திரிய இவை எல்லாம் போதா என்று எண்ணி, 'இமையோர் மாயை' யைத் துணையாகக் கொண்டார். அதை அறிந்த துளஸிதாஸர் முதலிலேயே இமையவர் சூழ்ச்சியை வருணித்து விட்டார்! இமையோர் மாயையும் சூழ்ச்சியும் என்ன என்று இப்பொழுது புரிந்ததல்லவா?

கைகேயி மந்தரையின் பேச்சை நம்ப ஆரம்பித்தவுடனேயே துளஸியும் 'இமையோர் மாயை' யை மீண்டும் ஒரு முறை ஞாபகப் படுத்துகிறார்.

> கூட கபட வசன சுனி தீய அதர புதி ராணி
> சுர மாயா பஸ் வைரினிஹி ஸுஹ்ருத ஜானி பதியானி.

வஞ்சக வார்த்தைகளைக் கேட்ட ராணி, பெண்பாலாதலாலும் உதட்டிலே புத்தியை உடையவளாதலாலும் தேவ மாயையின் வசப்பட்டு எதிரியை நண்பன் என்று எண்ணி நம்பிவிட்டாள்.

கம்பர் இயன்றவரை தம்மாலானதைச் செய்து பார்த்து, காரணங்கள் எல்லாம் பற்றாமைகண்டு இமையோர் மாயையைத் துணைகொண்டதைத் துளஸி அறியாமல் இருந்திருந்தால் முதலிலேயே அதைத் தன் கற்பனா ரஸாயனம் கொண்டு மெருகிட்டுத் தம் நூலிடைப் பதித்திருப்பாரா? என்பதில் எனக்குச் சந்தேகம் தான்!

ஸ்ரீ:

இராமாவதாரத்தனிச்செய்யுள்உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

ஆரணியகாண்டம்: சபரிபிறப்புநீங்குபடலம்—7.

வீட்டினுக் கமைவதாய மெய்ந்நெறி வெளியிற்றாகக்
காட்டுறு மறிஞ ரென்ன வன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டன னென்ப மன்றோ கேள்வியாற் செவிகள் முற்றுந்
தோட்டவ ருணர்வி னுண்ணு மமுதத்தின் சுவையாய் நின்றான்

கேள்வியாற் செவிகள் முற்றும் தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான், வீட்டினுக்கமைவதாய மெய்ந்நெறி வெளியிற்றாகக் காட்டுறும் அன்னவள் கழறிற்றெல்லாம் வீட்டினுக்கமைவதாய மெய்ந்நெறி வெளியிற்றாகக்காட்டுறும் அறிஞரென்னக் கேட்டனன் என்ப எனக் கூட்டுக.

இதன் பொருள்: பல அரியநூல்களைப் பெரியோரிடம் கேட்டலினால் நன்றாய்த் தொளைக்கப்பட்ட செவிகளையுடையவர்கள் பரம்பொருளை உணர்ச்சியால் அநுபவிக்கும்போது உண்டாகும் இன்பத்தின் சுவையாய்நிற்கின்ற இராமன் சபரி சொல்வதைக்கேட்டனன். சபரி சொல்வது: சீதையின் விடுதலைக்கு உதவியான சுக்கிரீவன் நட்பை அடையும்பொருட்டு ரிசியமூகபர்வதத்தடிக்குக் கொண்டு போய்விடும் சரியானவழி நன்குபுலப்படும் ஆறு. அதை இராமன் கேட்டது:—மோக்ஷப்ராப்திக்குத் தவறாது உதவுவதாய ஸத்மார்க்கம் சிஷ்யனுக்கு நன்கு புலனாகி அவன் மனம் மொழி மெய்களால் அறிந்தும் சொல்லியும் அநுஷ்டித்தும் உஜ்ஜீவிக்கப்புகட்டும் ஆசாரிய சிரேஷ்டர்கள் என்று நினைத்து சபரியிடம் கேட்டது. இங்கே கேட்டனை என்பதற்கு ஐயந்தோன்றியவிடங்களில் வினவினன் என்றும் ஆம்.

சபரி மலைநாட்டுப் பெண். கபடம் சூது இல்லாதவள். சாஸ்த்ரார்த்தங்களைக்கற்று பகவத்குணஸ்வரூபங்கள் அறியாதவள். ரிஷிகளுக்குப் பணிவிடைகள்புரிந்து அவர் அருள்வழிப்பட்டு வீடுபேற்றிற்குத் தகுதிபூண்டவள். இராமனை வழிபட்டபிறகு உலகவாழ்வு துறக்கக் காத்திருப்பவள். மலைக்காட்டில் பிறந்து அங்கேயே

வளர்ந்தவளாகலின், அந்த மலையிலும் காட்டிலும் செல்லும் வழிகள் அவளுக்கு நன்கு தெரியும்.

ஆகையால் அவள் ரிசியமூகபர்வதத்தடிக்கு இராமலக்குமணர்கள் போய்அடைய வழிகாட்டித் தருகிறாள். இராமன் அதனைக் கேட்டுக்கொள்கிறான். அவள் சொல்லும் ஒவ்வொரு அடையாளமும், நெறிகளின் தூரமும், அங்கங்கேயுள்ள சூழ்நிலையும் ஆகிய எல்லாவற்றையும் மிக்ககவனத்துடன் வரிசைதப்பாமலும் ஒன்று விடாமலும் செவியேற்றிருந்து, நினைவுமாறாது நெஞ்சில் நிலையுறுத்திக்கொள்ளுகிறான் இராமன்.

இப்பொழுது கவி கம்பர் தம் மனக்கண்ணால் இராமனை நோக்குகிறார். அடடா! இராமன் இருக்கும் எளிய நிலைமைதான் என்னே? மோக்ஷமடைந்து உஜ்ஜீவிப்பதற்கு ஒரு மஹாசார்யன் பரமக்ருபையால் மார்க்கத்தை உடதேசிக்க அதைக் கவனமாக்க் கேட்கும் சிஷ்யன்போலல்லவா இவன் காணப்படுகிறான் என்று வியந்து கூறுகிறார்.

சொல்பவள் ஒன்றுமறியாத பேதை. தன்னால் இராமனுக்குச் செய்யத்தக்க உதவி இந்த மலைக்காட்டுவழியை அவனுக்குக்காட்டி கொடுப்பது ஒன்றுதான். அதை உள்ளன்போடு அவள் செய்து தருகிறாள். அந்த ஞானத்தை அவளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இவனோ எல்லாமுணர்ந்தவன். அதுமட்டுமல்ல, எல்லாமுணர்ந்தவர்கள் வைகுண்டாதி திவ்யலோகங்களின் அறிவை உணர்ச்சியிற்புகுத்தி அநுபவித்து இன்புறும்போது அந்த இன்பத்திற்கே சுவையாய்நிற்கும் பரம்பொருள்.

இதனால் நாம் ஒரு சிறுபொருளையும் அறிவுடையார்வாய்க் கேட்டு உணருங்கால் அவர்களிடம் குரு என்னும் புத்திசெய்து கவனமாகக்கேட்டு நன்றியறிதலோடு உணரவேண்டுமென்பதைக் கவி வற்புறுத்துகிறார். சபரியினுடைய உள்ளன்பின்மேன்மை இராமனையுங்கூட அவளைத் தன் ஆசார்யனாக மதிக்கச் செய்தது. ஞானத்தின் ஏற்றமும் அதை உள்ளன்போடு தருவோர் மேன்மையும் அதை அடைபவர் மேற்கொள்ளவேண்டிய பணிவும் இத்தகைய என்பதை ஸநாதநதர்மநிஷ்டனாகிய இராமன் அநுஷ்டித்துக்காட்டின முறைமையைக் கம்பர் பாராட்டிய பாடல் இது.

சங்ககால மன்னர்கள்

வித்துவான். கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A. விரிவுரையாளர்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடுங்கோ.

கபிலர் இருங்கோவேளை நோக்கி, "அரையத்துக் கேடும், நும் போலறிவின் நுமருள் ஒருவன், புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை, இகழ்ந்ததன் பயனே" எனக் கூறுகின்றார். செல்வக் கடுங்கோ வாழி யாதனை இயன்மொழி என்னும் துறையமைந்த செய்யுளால் இவரே போற்றியுள்ளார்(புறம் 8. 14.). பதிற்றுப் பத்துள் ஏழாம்பத்து இம்மன்னனை இப்புலவர் புகழ்ந்ததேயாம்' அவ்வேழாம் பத்தில் முதற்பாட்டில் "மாவண்பாரி முழவுமண்புலா இரவலரினைய வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென" எனக் குறிப்பதால் பாரி இறந்தபின் இப்புலவர் செல்வக்கடுங்கோ வாழி யாதனை யடைந்தவராதல் வேண்டும். 'இச் சேரலன்பால் அதிக நாள் தங்கியிருக்கமாட்டார் கபிலர்' என்பது, அவர் பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்தார் என்ற செய்தி புறம். 235-ஆம் பாட்டால் புலப்படுவதனால் விளங்கும். ஆதலின் செல்வக்கடுங் கோவின் காலத்து, கழாஅத்தலையாரால் கையறுநிலை பாடப்பெற்ற குடக்கோ நெடுஞ்சேரலாதன் இருந்தனனா? என்பது ஆய்வுக்குரிய தாம்.

குண்டுகட் பாலியாதனார் புறம். 387-ஆம் செய்யுளில் வஞ்சிமா நகரம் செல்வக்கடுங்கோவுக்குரியதெனக் குறிக்கின்றார். அகம் 396-ம் செய்யுளில் அந்நகரம் இமயவிற்பொறித்தோனுக்கு உரிய தெனக் கூறுகின்றார் பரணர். குடக்கோ நெடுஞ்சேரலாதனே இமயவிற் பொறித்தோன் எனக் கூறுகின்றனர்(அகம். 127.). செல் வக்கடுங்கோவும் நெடுஞ்சேரலாதனும் சமகாலத்தவராயின் இரு வருக்கும் வஞ்சி உரியதாக இருக்க முடியாது. ஆதலின் இருவரும் வெவ்வேறு காலத்தவராதல் வேண்டும்.

குட்டுவனுக்குரிய நகரங்கள் வஞ்சி, மாந்தை, தொண்டி, முசிறி, கழுமலம் ஆகும். நெடுஞ்சேரலாதனுக்குரியன மாந்தையும் வஞ்சியும். பெருஞ்சேரலிரும்பொறைக் குரியது தொண்டி. நெடுஞ்சேரலாதனுக்குரிய மாந்தையும், வஞ்சியும் குட்டுவனுக்கு முரியன. ஆதலின் குட்டுவன் நெடுஞ்சேரலாதனுக்குப்பின் அரசு செய்தியவன் என்பதும் உறுதிப்படும். ஆதலின், செல்வக் கடுங்கோ நெடுஞ்சேரலாதனுக்கு முற்பட்டவனாதல் வேண்டும். இருவரும் சமகாலத்தவர் என்ற செய்தி பதிற்றுப்பத்துப் பதிகத்தால் அறியப்படுவதாம். அப்பதிற்றுப்பத்து எட்டாம்பத்துப் பதிகம் செல்வக்கடுங்கோவின் மகன் பெருஞ்சேரலிரும்பொறை எனக் கூறுகிறது. அவ்விரும்பொறைக்கு உரிய நகரம் தொண்டி. 'அவன் செல்வக் கடுங்கோவின் மகனாயின் வஞ்சி அவனுக்கு ஏன் உரியதாகவில்லை?' என ஐயம் எழுகிறது. தொண்டி பெருஞ்சேரலிரும்பொறைக்குப்பின் குட்டுவனுக்கு உரியதாயிற்றோ என எண்ண வேண்டியிருக்கிறது. அங்ஙனமாயின் இப்பெருஞ்சேரலிரும்பொறை குடக்கோ நெடுஞ்சேரலாதன் ஆட்சியின் பிற்காலத்தும், குட்டுவனது ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தவனாதல் வேண்டும். அதிகமான் நெடுமான் அஞ்சியுடன் போர்தொடுத்தவன் இவ்விரும்பொறை ஆதலின் அஞ்சியைக் குறிக்கின்ற பரணரால் குறிக்கப்படும் பொறையனும் இப் பெருஞ்சேரலிரும்பொறையாகத்தான் ஆகவேண்டும்.

இவைகளை நோக்கின் நெடுஞ்சேரலாதன் செல்வக்கடுங்கோவாகத்தான் ஆகலாகாதோ என ஐயுற, இடனுண்டாகிறது. திரு. கனகசபைப்பிள்ளை அவர்கள், குட்டுவன் தந்தை செல்வக்கடுங்கோ எனக்குறிப்பதும் இத்தகையஐயப்பாட்டினாலேயே. எனினும், செல்வக் கடுங்கோ மாந்தரம் பொறையன் கடுங்கோவாக ஆதல் வேண்டும்.

மாந்தரம் பொறையன் கடுங்கோ என ஒரு சேரமன்னனைப் பரணர் குறிக்கின்றார். "புலமீக் கூறும் புரையோ ரேத்த, பலர் மேந் தோன்றிய கவிகை வள்ளல், நிறையருந் தானை வெல் போர் மாந்தரம், பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற, குறையோர்

கொள்கலம் போல" (அகம் 142) என அவனது வீரத்தையும் ஈரத்தையும் போற்றுகின்றார். நன்னன் படைத்தலைவனாகிய ஞிமிலி என்பான் அதிகனைக் கொன்ற வரலாற்றையும் அச்செய்யுட் பகுதியிலேயே குறிக்கின்றார். ஆதலின் இருவரும் சமகாலத்தவராகவோ அண்மைக் காலத்தவராகவோ இருத்தல் வேண்டும். பாலை பாடிய பெருங்கடுங்கோ, "ஒண்டொடி மகளிர் இழையணிக் கூட்டும், பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு, ஏழிற் குன்றம் பெறினும்........யாரோ பிரிகிற் பாரே" என நன்னது வள்ளன்மையையும் அவனது மலையையும் புகழ்கின்றார். ஆதலின் மேற்கூறிய மாந்தரம் பொறையன் கடுங்கோவும் இப் பாலைபாடிய கடுங்கோவும் ஒருவரேயாதல் வேண்டும். அஃதைதந்தை சோழர்க்குரியதாகிய பருவூர்ப் பாசறையில் இருபெரு வேந்தரையும் பொருது கொன்று வென்றனன் என்ற வரலாற்றை மருதம்பாடிய இளங்கடுங்கோ கூறுவதால் இவ்விளங்கடுங்கோவும் பாலைபாடிய பெருங்கடுங்கோவும் சமகாலத்தவராதல் வேண்டும் என்பதும், இருவரும் அண்ணனும் தம்பியுமாக இருத்தல் வேண்டும் என்பதும் துணியப்படும்.

பாலை பாடிய பெருங்கடுங்கோவுக்குத் 'தண் பொருநைப் புனல் பாயும், விண்பொரு புகழ் விறல் வஞ்சி' உரியதெனக் கூறுகின்றார், பேய்மகள் இளவெயினி என்னும் புலவர். (புறம் 11) கொண்கானத்து நன்னனைப் புகழ்கின்றார் பெருங்கடுங்கோ. மிஞிலியால் கொல்லப்பட்ட வேண்மானுடைய மகளிரது வருத்தத்தை அகுதை களைந்தான். அவ்வகுதையின் தந்தையின் போர்ச்செயலைக் குறிக்கின்றார் இளங்கடுங்கோ. மோசிகீரனார் ஆய்பொதியிலைக் குறிக்கின்றார்; தன்னை எதிர்த்த வேந்தரோடு தறுகண்மையொடு நின்ற நன்னனது வீரத்தைக் குறிக்கின்றார்; முரசுக்கட்டிலில் துஞ்சிய தனக்கு, துயிலெழுந்துணையும் கவரி கொண்டு வீசிய பெருஞ்சேரவிரும்பொறையைப் புகழ்கின்றார். ஆதலின் மாந்தரம் பொறையன் கடுங்கோ செல்வக்கடுங்கோவின் காலத்தவராக ஆதல் வேண்டும். மோசிகீரனார் அந்துவனைப்பாடிய முடமோசியாரது மகனாக இருத்தல் வேண்டும். ஆதலின் மாந்தரம் பொறையன் கடுங்கோவும் செல்வக் கடுங்கோவும் ஒருவரேயாதல் வேண்டும். இருவர்க்கும்

வஞ்சி உரியதெனக் காணக்கிடப்பதும் இக்கருத்தை வலியுறுத்தும். மருதம் பாடிய இளங்கடுங்கோ மாந்தரம் பொறையன் கடுங்கோவின் இளவலாதல் வேண்டுமென்பது முன்னர்க்குறித்துள்ளேன். இளங்கடுங்கோ அகுதை தந்தையைக் குறிக்கின்றார். செல்வக் கடுங்கோவைப் பாடிய கபிலர் அகுதையைக் குறிக்கின்றார். இஃதும் மேற்குறித்த செய்தியை வலியுறுத்துவதாகும். செல்வக்கடுங்கோவைப் பொறையர் மரபினனாகக் கருதுவதற்கும் இஃதே காரணமாக வேண்டும்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், செல்வக்கடுங்கோ, பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆகியவர்கட்குப் பூழிநாடு உரியதெனப் பதிற்றுப்பத்து கூறுகிறது. களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல் பூழிநாட்டை நன்னனிடமிருந்து மீட்டனன் எனப் பதிற்றுப்பத்துப் பதிகம் கூறுகிறது. கல்லாடனார் இழந்த நாட்டை வென்று கொண்டான் நார்முடிச்சேரல் எனக்கூறுதலால், நார்முடிச்சேரலின் முன்னோனுக்குரியதாயிருந்து இழக்கப்பட்ட நாடு பூழிநாடு என்பது பெறப்படுகிறது. அல்லது நார்முடிச்சேரலே அந்நாட்டை யிழந்து மீண்டும் பெற்றான் எனக் கூறினும் பூழிநாடு பொறையர் மரபினுக்கே உரியதாகக் கூறப்படுகிற தென்பதும் பெறப்படுகிறது. பல்யானைச் செல் செழு குட்டுவனுக்கும் நார்முடிச் சேரலுக்கும் அந்நாடு எங்ஙனம் உரியதாயிற்று என்பது பெறப்படவில்லை.

நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும்.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கு வேளாவிக்கோமான் பதுமன்தேவி யீன்ற மக்கள் எனப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் கூறுகின்றன. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பத்துப்பாடல்களால் புகழ்ந்து பாடியுள்ளார் (பதிற்றுப்பத்து ஆறும் பத்து). இப்புலவர் குறுந்தொகைப் பாட்டொன்றில் நள்ளியைக் குறிக்கின்றார். இக் காலத்துப் பிறமன்னர்கள் யாவர் என உணர வேறு கருவிகளில்லை. இச் சேரலனுக்குரியது தொண்டி என்பது அக் குறுந்தொகைச் செய்யுளில்

ஊகித்துணரப்படும். பதிற்றுப்பத்துப் பதிகமும் தொண்டியைக் குறிப்பிடுகின்றது.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பத்துப் பாடல்களால் புகழ்ந்துள்ளார் (பதிற்றுப் பத்து நான்காம் பத்து). இப் புலவர் பிற மன்னர்கள் யாரையும் குறிக்கவில்லை. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய கல்லாடனார் இச் சேரலின் செய்தியை அகப்பொருட் செய்யுளில் உவமையாக எடுத்தாண்டிருக்கிறார். இந் நார்முடிச்சேரல் இழந்த நாடு தந்தவன் எனவும், நன்னனை வாகைப் பறந்தலையில் வென்றி கண்டவன் எனவும் குறிக்கின்றார். (அகம் 199.) ஆகலின் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் காலத்து முற்பகுதியிலாவது அவனுக்கு முந்தியாவது இச் சேரல் வாழ்ந்திருக்க வேண்டும். அகநானூற்று 199-ஆம் பாடலால் நார்முடிச்சேரல் இழந்த நாடு பூழிநாடு என்பதும் அந்நாட்டை நன்னனிடமிருந்து மீட்டனன் என்பதும் அறியப்படுகின்றதேயன்றி, இழந்த நாட்டைப் பெறுதற்கு முன் அவனது அரசிருக்கைக்குரிய நகரம் எது? என்பதும் நாட்டினை இழந்தவன் யாவன்? என்பதும் அறிய இயலவில்லை. பதிற்றுப்பத்து உரையாசிரியர் 'இச் சேரல் அரசெய்திய போது நாடு பிறரால் கவரப்படவே, அரசுக்குரிய முடியின்மையால் நாரால் முடிசெய்து அணிந்து கொண்டான்' எனக் கூறுகின்றார். அவ்வுரையாசிரியர் கூறுவதும் அந் நான்காம் பத்துப்பதிகம் கூறுவதும் உண்மையாயின் நாட்டையிழந்தவன் குடக்கோ நெடுஞ்சேரலாதனாகத்தான் ஆகவேண்டும். இமயவரம்பன் நாட்டை இழந்தனனோ என்னும் ஐயம் ஒருபுறம் இருக்க, இமயவரம்பன் மகன் முடியின்மையின் நார் முடியணிந்தனன் என்று கூறுவதும் சிந்தித்தற்குரியதாகவே இருக்கிறது. மகனுக்குச் சூடுதற்குரிய மணிமுடி யில்லை என்பதுபற்றிக் கவலைகொள்ளாது இருந்தான் இமயவரம்பன் என்பதும் பொருந்துமாறில்லை. இமயவரம்பனுக்குப் பிறகு இச்சேரல் பட்டத்துக்கு வந்திருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாமோ எனின் கொள்ள இயலாது. நெடுஞ்சேரலாதனுக்குரிய மாந்தையும் வஞ்சியும் அச் சேரலாதன் போர்க்களத்துப் பொருது வீழ்ந்து கிடந்த நிலையைக் கூறுகின்ற பரணரால் சிறப்பிக்கப்பட்ட

கடலோட்டிய வேல்கெழு குட்டுவனுக்கு உரியன். எனவே, நெடுஞ்சேரலாதனுக்குப் பிறகு பட்டமெய்தியவன் குட்டுவனாதல் வேண்டும். ஆதலினால், குட்டுவனுக்கும் நெடுஞ்சேரலாதனுக்கும் இடைப்பட்டவன் இந் நார்முடிச்சேரல் எனக் கொள்ளல் இயலாது. பதிற்றுப் பத்துள் நான்காம்பத்து நார்முடிச்சேரலையும் ஐந்தாம்பத்து குட்டுவனையும் புகழ்ந்து கூறுவதனால் குட்டுவனுக்கு மூத்தவன் நார்முடிச் சேரல் என்பதும், இச் சேரல்நெடுஞ்சேரலாதன் மகன் என்பதும் பொருந்துமாறில்லை என்பது ஓர்ந்துணர்தற்குரியது. பதிற்றுப்பத்துப் பதிகங்கள் கூறுவன யாவும் உண்மையாக இருத்தல் இயலுமோ என எழும் ஐயத்தை இந் நார்முடிச் சேரலின் வரலாறு உறுதிப்படுத்துகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியனால் தலையாலங்கானத்துப் போரில் வெல்லப்பட்ட சேரல் இந்நார்முடிச் சேரலாகத்தான் ஆகவேண்டும். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும் இந் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டவன்றான். ஆதலின் தலையாலங்கானத்து வெல்லப்பட்ட சேரன் இம் மாந்தரஞ்சேரல் ஆகானோ? எனின் ஆகான். மாந்தரஞ் சேரல் நெடுஞ்செழியனது பிணிப்பிலிருந்து தப்பித்துச் சென்று கட்டிலேறினான் எனக் குறிக்கின்றது புறநானூற்றுப் பாடல் அடிக்குறிப்பு. தலையாலங்கானத்துப் போரில் நெடுஞ்செழியன், 'சேரல் செம்பியன் முதலிய எழுவர் நல்வலமடங்கக் கொன்று களம் வேட்டனன்' என நக்கீரர் கூறுகின்றார். ஆதலினால் தலையாலங்கானத்தில் கொல்லப்பட்டவன் இச் சேரலாகத்தான் ஆகவேண்டும். எனினும் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டவன் பெருஞ்சேரலிரும்பொறையாக ஏன் இருத்தல் ஆகாது? என்னும் ஐயமும் எழுகிறது. இவ்வையம் பின்னர் ஆராயப்படும்.

[தொடரும்]

ஸ்ரீ:

மதிப்புரை

திருவாசகம்—திருவெம்பாவை; கதிர்மணி விளக்கப் பேருரை:—[உரையாசிரியர்: மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி, திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள். விலை ரூ. 1—8—0. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1-140, பிராட்வே சென்னை 1.]

கதிர்மணி விளக்கம் என்பது, ஆசிரியர் தம் திருவாசகவுரைக்கு வழங்கிய அருமைப் பெயர். இது 'சொல்லின் முடிவி னப்பொருள் முடித்த' லாக அமைந்து, உரையின் ஒண்மையை உளங்கொள விளக்கவைப்பது. ஆகலின் இவ்வுரைச் சிறப்பு வேறோராற்றால் விளக்கவேண்டுவதின்று. ஆயினும் 'அரும் பெருஞ் சோதி' யாம் பரம்பொருட் காட்சிக்குக் கதிர்மணி விளக்கம் கருவி எனல் அமையும்.

இத் திருவாசக வுரையில் திருவெம்பாவையுரை மூன்றுவதாம். திருச்சதக வுரை நீத்தல்விண்ணப்ப வுரை இரண்டும் முன்னரே வெளிவந்துள. பரிசும் பாராட்டும் பெற்று அவை அறிஞர்காதற்கு அமைவிருந்தாய்ச் சிறந்தன. இத் திருவெம்பாவை யுரையையும் அன்னவாறே தமிழ்மக்கள் அரும் பொருள் பெறுவார்போலப் பெரும்பரிவோடு பேணுதல் உறுதி.

இதுபோன்ற ஞானநூலுரைகளை முன்னை உரையாசிரியர்கள், பெரும்பான்மை வடமொழி விரவிய மணிப்பிரவாள நடையில் இயற்றியருளினர். அவ் வொண்பொருள்களைப் பிறழ்வின்றி உணர்த்தற்கு இருமொழியினுதவியும் இன்றியமையாத தென்பது, ஜைனர் வைணவர் சைவர் ஆதிய சமய நூலறிஞர் பலரும் உடன்பட்ட உண்மை. ஆயினும் வடமொழிப் பயிற்சி குன்றிவரும் இந்நாளில், இவ்வாசிரியர் பண்டிதமணியவர்கள், அவ்வொண் பொருள்களையும் எண்பொருள்வாகச் செலச்சொல்லும் மதிவன்மைகொண்டு மிகுதியும் வடமொழிவிரவாத சீரிய செந்தமிழ்நடையில் தம் உரையினை இயற்றியுதவிய அருந்திறன் பெரிதும் வியந்து பாராட்டற்குரியது. இவ்வாற்றால் இது தமிழுருள்ளத்தில் தனியிடம் பெற்று வீற்றிருக்கும் தகுதி சான்ற தென்னலாம்.

வடநூல் வழக்கினும் தென்தமிழ் மரபினும் வழிநிலைபிழையாத உயர் பேரொழுக்கம் பூண்ட இவ்வுரைநடையின் ஏனை எழில்நலன்கள் எல்லாம் இங்கு எழுதஅரியன என்று கைவாங்குதலே அமையும். 'நந்தாவுரையை எழுதலெவ்வாறு நவின்றருளே' என்ற ஆன்றோர்வாக்கும் சான்றாகவுள்ளது.

சுருங்கச் சொல்லின் இத் திருவெம்பாவை உரைப்பதிப்பு மிகச் செவ்விய முறையில் அமைந்து விளங்குகிறது. உரையாசிரியர் எழுதிய நூல் வரலாறு இன்றியமையாத முன்னுரையாய் இன்பந்தருகின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர் திரு. க. வெள்ளைவாரணனாரவர்கள் எழுதிய முகவுரை, பாவையுரையாம் பனிநீர்ச் சுனையில் ஆழ்ந்து திளைத்து அநுபவிக்கின்றது. குன்றக்குடி திருவண்ணாமலை யாதீனம் மஹாசந்நிதானம் சீலத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவுள முவந்து அருளிய நிறைமொழி வாழ்த்து, காப்பாக நின்று அளிசெய்கின்றது.

கோத்தமங்கலம் சிவநெறிச்செல்வர் உயர்திரு. சி. ராம. மு. லெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் புத்தக வெளியீட்டின் பொருட்செலவை நன்கொடையாக நல்கியுள்ளார்கள். 'நல்லபொருளை நாயனுக்கு உரிமையாக்குக' என்பது பண்டை வழக்கு. அதற்கேற்ப இப் பாவைமணிவிளக்கம் உயரிய ஒப்புரவாண்மையோடு சைவத்தமிழ் வளர்க்கும் நம் கலைத்தந்தை திரு. கரு முத்து. தியாகராசச் செட்டியாரவர்களுக்கு உரிமையாக்கப்பெற்ற பெருமையும் எய்திற்றெனின், இதற்கு இதன்மேல் நலம் யாதுகொல்? 'சோராதன வுளவோ பெருஞ் செல்வர்க்கு' என்ற கவிச்சக்ரவர்த்தியின் வாக்கு இங்கே கருதத்தக்கது. இங்ஙனம் இருதலைக்கும் பேறாக இயைந்த இவ்வாய்ப்பின் அருமைதான் என்னே!

உண்மையா னோக்கின் இத்திருவாசகப் பேருரைக்கு மதிப்புரை தேவையின்று. ஆயினும் இதனைப் பாராட்டுவதெல்லாம் 'திணிசுடர் இரவியைத் திருத்து மாறுமப், பணியிடைப் பள்ளியான் பாந்த மார்பிடை, மணியினை வேகடம் வருக்குமாறும்' போல்வதேஎனின் மிகையாகாது.

இதுகாறும் வெளிவந்ததும், இனி வெளிவருவதுமான கதிர்மணி விளக்கப் பேருரை தமிழுலகில் பொன்றாப் புகழுடன் நின்று நிலவுமாறு மன்றவாணன் திருவருள் மலர்க.

தமிழ்மொழி

திரு. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள், தக்கலை.

(22-ம் பக்கத்தொடர்ச்சி.)

செந்தமிழும் கொடுந்தமிழும்

யார்க்கும் எளிது விளங்குந் தமிழைச் செந்தமிழ் என்றும் எளிது விளங்காதவற்றைக் கொடுந்தமிழ் என்றும் பலர் கருதிவருகின்றனர். தமிழின்கண் எக்கொடுமையும் இல்லை. கொடுந்தமிழ் என்பதற்குத் திரிந்த தமிழ் என்பது பொருள். கொடுமை வளைவு என்க. எனவே, செந்தமிழ் நாட்டைச் சூழ்கிடந்த கொடுந்தமிழ் நாட்டுச் சொற்களே கொடுந்தமிழாம். அவையெல்லாம், தமிழாயினும் செந்தமிழ்க்கண் திசைச்சொற்களாம் என்க. தள்ளை, தன்றி, பறச்சில் (பேசல்) கெல்பு (கில் + பு = கிற்பு இயலுந்தன்மை, திறமை) உவ்வு (உம்) வாவு—உவா என்பன எல்லாம் கொடுந்தமிழ் என்க.

செந்தமிழ் நாட்டுக்குரிய சொற்கள் எல்லாஞ் செந்தமிழ்ச் சொற்களாம். தமிழில் இயற்சொல் திரிசொல் என இருவகைச் சொற்கள் கூறப்படுகின்றன. 'செந்தமிழாகித் திரியாதியார்க்கும்—தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்' என்பதனால், இயற்சொல்லெல்லாம் செந்தமிழ் என்பது பெறப்படுமாயினும், செந்தமிழ்ச்சொற்கள் எல்லாம் இயற்சொல் அல்ல. அவற்றுள் திரிசொற்களும் உள. 'செந்தமிழாகித் திரிவது' திரிசொற்கள் என்க. அவை என்றிசினோர், என்மனார், வந்தியான், சென்றீக முதலியன. எனவே, இயற்சொற்றமிழ் என்பது எளிமையைப் புலப்படுத்துமெனவும் செந்தமிழ் இயற்சொல்லினும் திரிசொல்லினும் இயன்று எளிதாயும் அரிதாயும் வருமெனவும் கொள்ளப்பெறும். கொடுந்தமிழ்ச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் கலந்துவருவது எவ்வாற்றானுஞ் செந்தமிழ் ஆகாதென்க. பெரும்பான்மை பற்றிச் செந்தமிழ் என்று கூறவேண்டினும், அவ்விரண்டன் வழக்கு அருகல் வேண்டும்.' திசைச்சொற்கள் செந்தமிழ்ச் சொற்களினு மிக மலிந்து கிடக்கும் கட்டுரைகள் பலவற்றையும் செந்தமிழ் என்று சிலர் கூறுவது ஆராய்ச்சியின்மையாலாம் என்க.

இக் காலத்துக் கலவைத் தமிழ் என்பதொன்று பல இதழ்களிலும் காணப்படுகிறது. அதனை வரிவடிவு நோக்கித் தமிழ் என்றே மாயினும், சொல்லாலும் நடையாலும் அது தமிழ் அன்று என்பது போதரும். அதனையும் பொதுமக்கள் பலர் விரும்புவதற்கு அதன்கண் உள்ள சில தமிழ்ச்சொற்களே காரணமாகும். அது முழுதுந் தமிழாயின், எத்துணைக்கு விரும்பப்படும்?

தனித்தமிழ்

தமிழ் தனித்து இயங்குந் தன்மையுடையது. அதனால் உலகின் எல்லாப் பொருள்கட்கும் வினைகளுக்கும் உள்ளக்குறிப்புக்கட்கும் உரிய சொற்கள் தமிழில் உள என்பது கருத்தன்று. தமிழர்க்கு உரியனவாய் வரும் அம்மூன்றற்குந் தமிழில் சொற்கள் உண்மையால், தமிழர்க்குரிய எல்லா வாழ்க்கை நிகழ்ச்சிகளையுந் தனித் தமிழில் கூறலாகும். தனித்தமிழ்ச் சொற்களிலும் சில இக்காலத்து அழிந்துவிட்டன. வினையுங் குறிப்புமாய் வருந் தமிழ்ச்சொற்கள் உலகினர் யாவர்க்கும் பொருந்துவனவாயுள்ளன. ஆகவே உலகின் எம்மருங்குள்ளார் கருத்துக்களையும் தனித் தமிழில் எழுதலாகும். பிறநாட்டுப் பொருட்பெயர்கள் எல்லாம் தமிழில் இல்லாமையால், அவற்றின் பண்பு வினை முதலிய நோக்கி அவற்றுக்கேற்ற தமிழ்ச்சொற்களை அமைத்துக்கொள்ளத் தமிழ் இடந்தருகின்றது. சில மொழிகளில் அம்மொழி பேசுவார் தம் கருத்துக்களை விளக்குவதற்கு உரிய சொற்களுங்கூட அமைந்த தில்லை. அக்குறை தமிழுக்கு இல்லை என்பது வெளிப்படை.

விரிந்த கருத்துக்களைத் தமிழில் சுருங்கிய மொழிகளாற் கூற முடியும். இது தமிழுக்குரிய தனிச்சிறப்பு. பிறமொழிகளில் விரிந்த நூல்களைத் தமிழில் சுருங்கிய நூல்களாகக் கருத்துக் குறைவின்றி அமைக்கலாகும். ஆயின், திருக்குறள் முதலிய நுண் ணூல்களைப் பிறமொழிகளில் சுருக்கி அமைத்தல் அருமை என்பது சிலருடைய முயற்சிகளால் அறியப்பட்ட உண்மை என்க. விரிந்த கருத்துக்களையும் குறிப்புக்களையும் விளக்கும் சொற்கள் தமிழில் இரண்டோரெழுத்துக்களால் அமைந்து நிற்கும் அழகு ஆய்ந்து காணத் தக்கது.

தனித்தமிழ்ப்போர் இன்று தமிழகத்தில் வேரூன்றி உறைத்து விட்டது. நாட்டுரிமை, பேச்சுரிமை கருத்துரிமை மொழியுரிமை

களுக்காகத் தமிழர் பலர் போராடுகின்றனர். எதிலும் தனிமையுந் தூய்மையும் நல்ல என்பதை மறுக்கொணாது. எனினும், மொழி என்பது ஒருபாலார்க்கு மட்டுமே உரியதன்றாய்ப் பலரும் பயிலக் கிடத்தலின் இன்றியமையாத விடத்துப் பிறமொழிகளையும் ஆளலாகும். அவ்வாறு ஆளுவதற்குரிய அவசியம் ஏற்படா வண்ணம் தமிழ்ச்சொற்களையும் பழக்கவழக்கத்திற் கொணரின் தனித்தமிழ் யார்க்கும் எளிதாய் விடும். இன்று தனித்தமிழ் எழுதுவார் சில புலவர் மட்டுமே. நமது மொழியை நாமே கலப்பின்றி எழுத இயலாதவராயின், நமது மொழிவலிமை என்னாகும்? தனித்தமிழ் எளிதுவிளங்கா விடத்துமட்டும் அதனைமாற்றிப் பிறவிடங்களில் எல்லாம் தனித்தமிழை ஆளுவது சிறப்புடைத்தே. இக்கட்டுரையிலும் இன்றியமையாத சிலவிடத்து வடசொல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி வளரவேண்டுமாயின் பிறமொழிகள் ஊன்றிக் கொடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு பலர் தமிழில் ஆங்கிலச் சொற்களையும் பிறமொழிச்சொற்களையும் மிகுதியாக எடுத்தாள்கின்றனர். தமிழ் பிறமொழிகளை ஊன்றிக்கொடுத்தாலன்றி அவை வளம்பெறா என்பாரைக்காணேம். தமிழ்ப் பயிற்சிக் குறைவால் பலர் தமிழை நிலைகுலைத்துவருகின்றனர். பிறமொழிகளை வேண்டுமிடத்துக் கலப்பதன்றித் தோன்றியவாறெல்லாந் தமிழின்கண் புகுத்திவரின் தமிழ்மொழி வளராது; மாறாக தமிழ்க்கிளையாய்ப் பிறிதொருமொழியே வளரும் என்க. பண்டிதத்தமிழ் எனச் சிலர் பழிக்குந் தூயதமிழ் மீண்டும் தமிழ்மொழியாயுலவும். அவ்வாறு தமிழைச்சிதைத்தும் வடமொழி மிகக்கலந்து எழுதியும் பேசியும் வந்ததன்பயனாகும் இன்றையமலையாளம். கலவைத்தமிழ் எழுதுவார் இசைத்தமிழ் என்று பெயர்கூறுவதற்கு ஏற்றதொரு மொழியையே ஆக்கிவருகின்றனர். கலவைத்தமிழால் தமிழ்க்கிளைகள் புல தோன்றுவதன்றித் தமிழ் அழிவதன்றாய் எஞ்சிநிற்குமாகலின் தமிழ்ப்புலவர்கள் அத்தமிழ்நோக்கி உவகையுறவேண்டுமன்றி உவர்ப்புறல் தகுதி அன்று. தமிழாலேயே தமிழ்வளர்ச்சியும் வளமும் பெறவேண்டும். பிறமொழிப் பொருள்களைத் தமிழில் எழுதுவதே அறிவும் திறனும் ஆக்கமுமாகும்.

சொல்லாக்கம்

பிறநாட்டுப் பொருட்பெயர்களுக்கும் கலைச்சொற்களுக்கும் தமிழில் புதுச்சொற்களை ஆக்கவேண்டும் என்ற கொள்கை விரும்பத்தக்கதுதான். எம்மொழியிலும் அம்மொழி வழங்கும் நாட்டுப்பொருள் கலை முதலியவற்றிற்கு உரியசொற்களே பெரிதும் காணப்பெறும். பிறநாட்டுப்பொருள் முதலியவற்றை அந்நாட்டுச் சொற்களால் தமிழிலுந் தமிழ்நெறிக்குஏற்பத் திரித்துக்கூறலாகும். அதுபற்றியே திசைச்சொல் வகுக்கப்பட்டிருக்கிறது. திசைச்சொல் தமிழ்ச்சொல் ஆக்கச்சொல் மூன்றையும் தழுவினால் தமிழில் எந்நாட்டுநூல்களையும் பெயர்க்கலாகும். பிறநாட்டுச் சொற்களோடு ஒக்குந் தமிழ்ச்சொல்லிருப்பின் திசைச்சொற்களை வழங்கவேண்டுவதில்லை. Opportunity-செவ்வி; Cultivation-பண்பாடு; Culture-பண்பு, சால்பு, சான்றாண்மை; Duty-கடமை; Industry-முயற்சி; Environment-சூழல்; Usage-வழக்காறு; Perfection-நிறைவு, நிரம்பல், முழுமை; முதலியன காண்க. தமிழில் தனிச்சொற்கள் இல்லாவிடத்துத் தமிழ்ப்பகுதிகளைப் பண்படவைத்துப் புதுச்சொற்களை ஆக்கலாகும். அவை வழக்கில் வந்து யாவராலும் தழுவப்படுந் தன்மையனவாகவேண்டும். ஒரு சொற்கே பலசொல் வருவது மொழிமுறையாதலால் இழுக்கன்று. Photo நிழற்படம்; Train தொடர் வண்டி (புகை வண்டி என்பது Train என்ற சொல்லுக்குப் பொருளன்று; பொருளில் யாதேனும் பண்புபற்றிப் பெயர் கூறலாமாயினும் நேர்மொழி இருக்கும்பொழுது பிறமொழிகள் நீக்குவதே நன்று); Aeroplane-வானஊர்தி; Cinema-படக்காட்சி; Mill-பொறி (நூற்பொறி); இயந்திரம் என்பது வடசொல். மில் என்னலும் தமிழ் நெறிக்குப் பொருந்தும். Paper இதழ்; Print-அச்சு, படி, பதிவு; Office-தொழில் நிலையம்; Exhibition-பொருட்காட்சி முதலியன காண்க.

மேற்கூறிய மூன்று நெறியானுமன்றிப் பிறசொற்களை வேண்டுமிடத்தெல்லாம் புகுத்துவது தமிழ்ச் செவ்வியை மாசுறுத்திவிடும் என்க. ஆக்கச்சொற்களை வழங்குவதரிது என்பர் சிலர். ஆனால், அவரறிந்த ஆங்கில மொழிகளைக் கற்பதற்கு அவரெடுத்த முயற்சி

யின் ஒருசிறு கூற்றுனே ஆக்கச்சொற்களை எளிதில் அறிந்துகொள்ள லாகும். இருக்குமிடத்து உணவு வாயுற வேண்டுமெனில், பட்டினியே பயனும். முயற்சியினுலேயே உலகில் எக்கலமும் பெற வேண்டும்.

தமிழ் முன்னேற்ற நெறிகள்

எல்லா மொழிகளும் முன்னேற்றம் அடைந்துவருங்காலம் இது. மொழிகள் முற்போக்கு அடைவதற்கு ஏற்ற கருவிகளும் இக்காலத்து உள. ஆயினும், ஏடெழுதிக் கற்ற காலத்திருந்த தமிழ்க்கல்வி இக்காலத்தார்க்கு இல்லை. தமிழை நன்கனம் பேணுமையே அதற்குக் காரணமாம்.

மொழியினும் கணக்கினுந் தமிழர் இயல்பாகவே திறன் உடையவர்கள். தமிழ் இலக்கியங்கள் தமிழருடைய இயற்கையறிவின் ஓவியங்களாய் நிலவுகின்றன. தமிழ் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளை மட்டுமே கற்றுத் தமிழை வெறும் பேச்சுமொழியாக மட்டும் தழுவிக் கொண்டு வருவதனுல், தமிழ் பின்னேக்கம் அடைந்து வருகின்றது. அரசியல் உத்தியோகங்களில் மயங்கித் தமிழர் பிற மொழிகளை மட்டும் பேணுகின்றனர். அரசியலாரும் தமிழை இகழ்கின்றனர். தமிழ் கல்லாரைவிடக் கற்றுர்க்கு இகழ்ச்சி தான் பயனுக முடிகிறது. தமிழ்ப்புலவர்களுக்கு எல்லா உத்தியோகங்களும் அளிக்கப்படுவதில்லை. கலாசாலை ஆசிரியர்களினும் கூடத் தமிழாசிரியர்களுக்கு வேதனம் குறைக்கப்பட்டிருக்கிறது. தாய்மொழிக்கு இதற்குமேல் இகழ்ச்சி யாது உளது?

அரசியலுக்கு உரிய எல்லாத் துறைகளுக்கும் உரியநூல்கள் தமிழில் ஆக்கப்பட்டுக் கற்பிக்கப்படவேண்டும். அவற்றைத் தமிழில் கற்றுர்க்குச் சிறந்த உத்தியோகங்கள் அளிக்கப்படவேண்டும். எல்லா உத்தியோக நிலையங்களும் தமிழ்மணம் பெற்று விளங்க வேண்டும். ஆங்கிலம் பொதுமொழியாக இருப்பதனுல் பிறநாட்டுத் தொடர்புகளுக்காக ஆங்கிலந் தெரிந்தவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாகும். அரசியல் தமிழில் நடப்பதனுல் நமது மதிப்புக் குறைந்து விடும் என்பது தவறுன கொள்கை. ஆங்கிலம் கற்றவர்

தமிழ்கற்றவரைவிட அறிவின் மிக்கவர் என்ற அறிவற்ற கொள்கை அறவே அகல வேண்டும். ஒரு மொழி மட்டும் ஒருவர்க்கு அறிவைக் கொணர்ந்து கொடாது. பயிற்சியும் ஆராய்ச்சியும் மிகுந்தவர்களே அறிவில் விளங்குவர். அவ்விரண்டும் தமிழ்ப் புலவர்கள் மாட்டே மிகுதியாயுள்ளன என்பது தொன்னூல்களால் விளங்கும். இயற்கையறிவற்றவர் எம்மொழி கற்பினும், அறிவுடையாராகார். அறிவாற்றல்களைப் பேணாது மொழிபற்றி வேற்றுமை பாராட்டுதல் மொழிமயக்கமேயாம்.

தமிழர்கள் எவ்விடத்துந் தமிழையே பயன்படுத்த முயல வேண்டும். தமிழ்க் கலாசாலைகள் எவ்விடத்தும் நிறுவப்படவேண்டும். மேனாட்டுக் கலைகள் தமிழில் பெயர்க்கப்பட்டுத் தமிழ்க் கலாசாலைகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஆங்கில முதலிய பிறமொழிகள் தமிழ்க் கலாசாலைகளில் கற்பிக்கப்படலாகும். நம் தாய் மொழியைப் பேணாது புறக்கணித்து, பிறமொழிகளுக்காக மிகுபொருள் செலவிட்டு உயர்ந்த கட்டடங்களை அமைத்தும் உயர்ந்த உத்தியோகங்களை அளித்தும் பேணலால் தமிழர் அடைந்த ஏற்றம் என்னை? வறுமையும் மேனாட்டு நாகரீகமும் மொழிவழித் தமிழரிடத்துப் புகுந்தன. தமிழரது உள்ளமும் அறிவும் ஆங்கில மணம்பெற்று, வழுவற்ற தமிழ்க்கொள்கை சிதறுற்றுவருகின்றது.

நூல் நிலையங்கள் கலாசாலைகட்கு அடுத்தபடியாக மொழிக்குப் பயன் செய்வனவம். தமிழ் நூல் நிலையங்கள் நம் நாட்டில் மிக வேண்டும். அரசியலார் தமிழுக்குப் பலவகையானும் ஆக்கம் அளிக்க வேண்டும். தமிழர் தனித்தமிழில் பேச முயலவேண்டும். ஆங்கிலச் சொற்கள் முதலியவற்றை வேண்டாவிடத்தும் இடைக் கலந்து பேசுவதனால் தமிழர்க்கு எத்தகைய உயர்வும் உண்டாவதில்லை. தமிழ் தடைப்படும் இடங்களில் மட்டும் பிறமொழிகளை வழங்கினாற் போதும்.